ரோமான் மார்க்க சீர்தூக்கல்

எழுதியது:

தீரன் லூமிஸ் தேசிகர்

முன் பதிப்புகள் 10000 காப்பிகள்

நான்காம் பதிப்பு 1000 காப்பிகள்

விலை 75 ந. பை

டாஸ் பிரஸ், நாசரேத்

1964

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

ரோமான் மார்க்க சீர்தூக்கல்

டாஸ் பிரஸ், நாசரேத்

1964

CONTENTS

1. The Ancient State of Rome 5
2. The Introduction of Christianity into Rome ... 6
3. The Church of Rome was not established by Peter 7
4. The Mother Church 9
5. The Unity of the Church 14
6. The Head of the Church 16
7. The Apostolic Church 20
8. The Keys 23
9. The Mother of God 25
10. Image Worship 29
11. Infallibility 33
12. Convents 35
13. Purgatory 36
14. Indulgences 40
15. Seven Sacraments 45
16. Transubstantiation 46
17. Half a Sacrament 50
18. Baptism 52
19. Auricular Confession 54
20. Extreme Unction 57
21. Sacrifice of the Mass 59
22. Celibacy of the Clergy 60
23. Popery Unscriptural 62
24. The Apostasy and Destruction of Popery ... 65

அட்டவணை

		பக்கம்
1.	ரோமாபுரியின் முற்கால நிலைமை	5
2.	கிறிஸ்து மார்க்கம் ரோமையில் உண்டான விபரம்	6
3.	ரோமைச்சபை இராயப்பரினால் ஸ்தாபிக்கப்படவில்லை என்பதற்கு முதாந்தரம்	7
4.	தாய்ச் சபை	9
5.	ஏக சபை	14
6.	திருச்சபைத் தலைமை	16
7.	ரோமைச்சபையின் அப்போஸ்தலிக் தொடர்ச்சி	20
8.	திறவுகோல்	23
9.	தேவ மாதா	25
10.	சொரூப வணக்கம்	29
11.	தவறுமை	33
12.	சந்நியாச மடங்கள்	35
13.	உத்தரிக்கும் ஸ்தலம்	36
14.	பாவமன்னிப்புச் சீட்டுகள்	40
15.	ஏழு தேவ திரவிய அநுமானங்கள் ...	45
16.	தேவ வசீகரம்	46
17.	பாதி நற்கருணை	50
18.	ஞானஸ்நானம்	52
19.	பாவ சங்கீர்த்தனம்	54
20.	அவஸ்தை பூசுதல்	57
21.	பூசைப் பலி	59
22.	குருத்துவம்	60
23.	ரோமான் மார்க்கம் வேதத்துக்கு விரோதம் என்று ஒப்பித்தல்	62
24.	ரோமான் மார்க்கம் கிறிஸ்து மார்க்கத்தில் விலகிப் போனதையும், அதின் அழிவையும் குறித்துச் சொல்லியது	65

முகவுரை

கிறிஸ்தவர்களை நித்திய ஜீவனுக்கு வழி நடத்துவதான பரிசுத்த வேதாகமத்தை, பிரார்த்தனையுடன் ஒழுங்காய் வாசித்துத் தியானிப்பதும், அதனால் தேவ பெலத்தைப் பெற்று அதன்படி நடப்பதும், மற்றவர்களும் நடக்க ஏவி உற்சாகப் படுத்துவதும் ஒவ்வொரு கிறிஸ்தவனின் முக்கிய கடமையாகும். இதற்கு மாறாக தற்கால கிறிஸ்தவ வகுப்பார் விபரீத நிலைமையில் விரைந்து வீண் சடங்காசாரங்களை அனுசரிப்பது மலைவுக்கு இடம் தருகின்றது. இந்நிலைமையில் பூர்வீக பக்தரின் ஆராய்ச்சி நூல்கள், பரிசுத்த வேதாகமத்தின் நிச்சய போதனைகளை நமக்கு உணர்த்தி, உறுதிப்படுத்தி, இன்னும் தெளிவான போதனைகளையும் அறிந்து கொள்ள வழி காட்டுகின்றன.

இச் சிறுநூல் எல்லா கிறிஸ்தவ வகுப்பாரும் தங்கள் மூட நம்பிக்கைகளையும், வெளி சடங்காசாரங்களையும் விட்டு சீர்திருந்தி நம் இரட்சகரும், அப்போஸ்தலரும் காட்டிய சத்திய வழியைக் கடைப் பிடித்து ஈடேறும் நோக்கத்துடன் திரும்பவும் பிரசுரிக்கப்படுகிறது.

கிறிஸ்தவ வேஷம் அணிந்து சபைகளுக்குள் நுழைந்தும், நுழைந்து வருகிறதும், நுழையப் போகிறதுமான நாகரீக வீண் சடங்கு என்று அஞ்ஞான ஆடம்பரங்களில் மயங்காமல் எச்சரிக்கையாயிருங்கள்.

சு. தாமஸ் இரத்தினம்

ரோமான் மார்க்க சீர் தூக்கல்

ரோமாபுரியின் முற்கால நிலைமை

ரோமாபுரி இத்தாலியா தேசத்திலுள்ள ஒரு ராஜதானி. இது கிறிஸ்துவுக்கு முன் 753-ம் வருஷத்தில் ரோமுலஸ் என்னும் ராஜாவினுல் உண்டாக்கப்பட்டது. முன்னே இது ஒரு மலையின் மேலே கட்டப்பட்டிருந்தது. பிறகு அதின் சுற்றிலும் இருந்த ஏழு மலைகளையும் உட்படுத்தி, அதை இரண்டு காத தூரமுள்ள பட்டணம் ஆக்கினார்கள். இந்நகர வாசிகள் ஒரு காலத்திலே ராஜாங்க வல்லமையிலும், யுத்தத்திலும், செல்வத்திலும், கல்வியிலும், சிற்பசாஸ்திரத்திலும், சித்திரவேலையிலும் மிகவும் பெயரெடுப்பாயிருந்ததின் நிமித்தம், இந்நகரம் உலக இராக்கினி என்று சொல்லப்பட்டது. இதிலே 20-லட்சம் ஜனங்கள் வரையில் வாசம் பண்ணினார்கள். நானூற்றிருபது விக்கிரகக் கோவில்கள் இருந்தன; அவற்றுள் பாந்தேயோன் என்ற கோவில் பிரதானமானது. இது சகல அஞ்ஞான தேவர்களுக்காகக் கட்டப்பட்டிருந்தது. அவர்கள் வணங்கி வந்த ஆயிரக்கணக்கான விக்கிரகங்களோடு அவர்கள் ஜெயங்கொண்ட தேசங்களிலிருந்த விக்கிரகங்களையும் கொண்டு வந்து வைத்து வணங்கினார்கள். ஜனங்கள் எல்லாரும் அக்கியானிகளாய் இருந்தார்கள். தற்காலத்தில் 2 லட்சத்து 44,000 ஜனங்கள் மாத்திரம் இருக்கிறார்கள். அவர்களுக்குள் நாஸ்தீகமும் துன்னடக்கையும் பெருகியிருக்கிறது.

பெரிய பட்டணங்களும், ஜாதிகளும் தேவனுக்கு முன்பாக நீதி நெறியில் ஒழுகினாலன்றி அவைகள் தழைத்தோங்க அவர் இடங்கொடார்.

கிறிஸ்து மார்க்கம் ரோமையில் உண்டான விவரம்.

இயேசு நாதர் பிறந்த 33-ம் வருஷத்தில் உலகத்தின் நாலா திசைகளிலும் இருந்த யூத ஜனங்களெல்லாரும் பெந்தேகோஸ்து என்னும் திருவிழாவுக்கு எருசலேமிலே வந்து கூடினார்கள். அப்போது பரிசுத்த ஆவியானவர் இறங்கினார். பேதுருவாகிய அர்ச்சியசிஷ்ட இராயப்பர் பண்ணின பிரசங்கத்தில் அநேகர் மனந்திரும்பினார்கள். ஒரே நாளில் மூவாயிரம் பேர் வரையில் ஞானஸ்நானம் பெற்றார்கள். அப்போஸ்தலரின் நடபடி 2-ம் அதிகாரம் 10-ம் வசனத்தில் காணப்படுகிறபடி, சில யூதர்கள் ரோமாபுரியிலும் இருந்து வந்தார்கள். அவர்கள் ரோமைக்குத் திரும்பிப் போனபோது, எருசலேமிலே தாங்கள் கண்ட அதிசயத்தையும், கேட்ட உபதேசத்தையும், பெற்ற நன்மையையும் குறித்து அறிவிக்கவே, அங்கே கிறிஸ்தவ சபை உண்டானதென்று தோன்றுகிறது. ஆகையால் அவர்கள் மூலமாய்த்தான் ரோமாபுரியில் முதன் முதல் கிறிஸ்து சபை உண்டானதாகக் காணப்படுகிறது. பின்பு கி. பி. 61-ம் வருஷத்தில் பவுலாகிய அர்ச்சியசிஷ்ட சின்னப்பர் அவர்களிடத்திற்குப் போனார். [அப். 28:23—31] இப்போது ரோமாபுரியில் 2 லட்சம் கிறிஸ்தவர்களும், 2,826 குருமாரும், 3.846 சந்நியாசிகளும், 1,600 கன்னியாஸ்திரிகளும், 35 மேற்றிராணிகளும் உண்டு. இவர்களுக்கு மேலாக கடவுளுக்குப் பதிலாளி என்று சொல்லப்பட்ட பாப்பு இருக்கிறார். ரோமாபுரியில் பாப்புப் பட்டம் உண்டானது 606-ம் வருஷம். பிதா என்று அர்த்தமுள்ள இந்தப் பட்டப்பேர், முதன் முதல் கி. பி. 139-ம் வருஷம் ஐ. ஜீனஸ் என்பவரால் தெரிந்து கொள்ளப்பட்டு, எங்குமுள்ள சகல மேற்றிராணிமார்களுக்கும் இடப்பட்டு வந்தது. பிறகு 606-ம் வருஷம் மூன்றும் பொனிப்பேசு என்னும் பாப்பு, போக்கஸ் என்ற கொடுங்கோன் மன்னனைத் தூண்டிவிட்டு, அந்தப் பட்டம் ரோமாபுரியில் தலைவராகத் தெரிந்து கொள்ளப்படும் பேர்களுக்கு மாத்திரம் வழங்கப்பட வேண்டும் என்று திட்டஞ்செய்தார். இப்போதிருக்கிற பாப்புவுக்குப் பெயர் 13-ம் லேயோ. இவருக்கு முன் 259 பாப்புகள் இருந்தார்கள். இந்தப் பட்டணத்தில்

300 கிறிஸ்தவ கோவில்கள் உண்டு. அவற்றுள் பிரதான மானது அர்ச்சியசிஷ்ட இராயப்பர் கோவில். மகா கொன்ஸ்தந்தீன் இராயன் கிறிஸ்தவனான 315-ம் வருஷம் வரையில் ரோமையில் அஞ்ஞான மார்க்கம் மும்முரமாகத் தான் இருந்தது. பிறகு அந்த இராயன் கிறிஸ்து மார்க்கத்தைத் தன் தேச மார்க்கம் ஆக்கி விட்டதினால் கிறிஸ்தவர்கள் பெருக்கமடைந்து மார்க்கத்தில் நிலைத்துக் கொண்டார்கள். ஜனங்கள் பெரும்பாலும் ரோமா கத்தோலிக்குக் கிறிஸ்தவர்களாய் இருக்கிறார்கள்.

1860-ம் வருஷ முதல் புரோட்டெஸ்டாண்டு மிஷன் சங்கத்தார் விசேஷமாய் ரோமையில் பிரவேசித்து, அநேக இடங்களில் கோவில்கள் பள்ளிக்கூடங்கள் கட்டி, சபைகளை ஸ்தாபித்து, சுத்த சுவிசேஷ போதனைகளைப் போதித்து வருகிறார்கள்.

ரோமைச்சபை இராயப்பரினால் ஸ்தாபிக்கப்படவில்லை என்பதற்கு முகாந்தரம்.

ரோமைச்சபை இராயப்பரினால் ஸ்தாபிக்கப்பட்டதென்றும், அதில் அவர் வெகுகாலம் மேற்றிராணியாய் இருந்தார் என்றும் ரோமான் மார்க்கத்தார் ஒரு பெருமையாகச் சொல்லிக் கொள்ளுகிறார்கள். இதற்கு வேதத்திலே யாதொரு ஆதாரம் இல்லை. கி. பி 57-ம் வருஷத்தில் சின்னப்பா அந்தச் சபைக்கு ஒரு நிருபம் எழுதியிருக்கிறார். அந்தக்காலத்தில் இராயப்பர் அங்கே இருந்ததாகத் தோன்றவில்லை. எப்படியென்றால், அந்த நிருபத்தின் கடைசியில் அவர் தமக்கு அறிமுகமான சுமார் 30 பேருக்குத் தம்முடைய வாழ்த்துதலை எழுதியிருக்கிறார். அவர்களுடன் இராயப்பரும் இருந்தால், அவருக்கும் எழுதியிருப்பார் 60-ம் வருஷத்தில் சின்னப்பர் ரோமைக்குக் கொண்டுபோகப்பட்டு, அங்கே இரண்டு வருஷம் வரையில் காவலில் இருந்தார். அக்காலத்திலாவது இரா

பர் ரோமையில் இல்லை எப்படியென்றால், சின்னப்பர் அங்கே இருந்து, எபேசியர், பிலிப்பியர், கொலோசெயர், பிலேமோன், ௨தீமோத்தேயு என்பவர்களுக்கு நிருபங்கள் எழுதி, அவைகளில் தம்மோடே இருந்தவர்களுடைய வாழ்த்துதல்களைச் சொல்லி அனுப்பியிருக்கிறார். அப்போது தம்மோடே இராயப்பர் இருந்தால் அவருடைய வாழ்த்துதல்களையும் அனுப்பியிருப்பார். சின்னப்பர் ரோமைக் கோர்ட்டில் விசாரிக்கப்படும்போது, தம்மோடே ஒருவரும் இல்லை என்றும், எல்லாரும் கைவிட்டார்கள் என்றும், கர்த்தர் ஒருவரே துணை என்றும் எழுதியிருக்கிறார். (௨தீமோ. 4:16.) அத்தருணத்திலாவது இராயப்பர் ரோமையில் இருந்தால், சின்னப்பருக்கு உதவி செய்யாமல் இருக்கமாட்டார். துன்பத்துக்குப் பயந்து அக்காலத்தில் இராயப்பர் இரட்சகரை மறுதலித்ததுபோல, இக்காலத்தில் சின்னப்பரையும் மறுதலித்தா போட்டார்?

ரோமன் மார்க்கத்தாரே, என்ன சொல்லுகிறீர்கள்?

ஒருவராவது தம்மோடே இல்லை என்று சின்னப்பர் எழுதியிருப்பது பொய்யா? மெய்யா? அல்லது அவர்கள் இருபேருக்கும் பகையா? அப்போஸ்தலருடைய நடபடிகளையும், இராயப்பர் எழுதின நிருபங்களையும் பரிசோதித்துப் பார்க்கும்போது, அவைகளிலாவது, இராயப்பர் ரோமைக்குப் போனதாகக் காணப்படவில்லை. மேலே சொன்ன முகாந்தரங்களினால் ரோமான் சபை இராயப்பரினால் ஸ்தாபிக்கப்படவில்லை என்று பரிஷ்காரமாய் வெளியாகிறது ஆனால் பூர்வீக சபைப் பிதாக்கள், பாரம்பரையாய்ச் சொல்லிவந்தார்கள் என்று ரோமானித்தார் சாதிப்பார்கள். பிரியமானவர்களே, பாரம்பரை உண்மையோ? வேதம் உண்மையோ? பாரம்பரியத்தைக் குறித்து இயேசுநாதர் சொல்லியிருப்பதைக் கேளுங்கள்: "நீங்கள் உங்கள் பாரம்பரிய முறைமையினால் தேவனுடைய கட்டளையை ஏன் மீறி நடக்கிறீர்கள் என்றார் (மத். 15:3.)

இந்துக்கள் அநேக பொய்யான காரியங்களைப் பாரம்பரையாய்ச் சொல்லிவருகிறார்கள். அதை நீங்கள் நம்பு

கிறீர்களக? இராயப்பர் ரோமாபுரிக்குப் போனதுண்டானல், சின்னப்பருக்குப் பிந்தி ஒருவேளை போயிருக்கவேண்டும். 64-ம் வருஷத்தில் நேரோ இராயனல் ரோமையில் துன்பம் உண்டானபோது, சின்னப்பர் தலைவெட்டப்பட்டும், இராயப்பர் தலைகீழாக சிலுவையில் அறையப்பட்டும் இறந்து போனதாகச் சரித்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

இப்படிக் கடைசியாக இராயப்பர் ரோமைக்குப் போய் இறந்துபோனபடியால், அந்தச் சபை அவரால்தான் உண்டாயிருக்கவேண்டும் என்று பிந்தின காலத்தில் இருந்த சபைப் பிதாக்கள் உத்தேசித்துக் கொண்டார்களேயல்லாமல், மற்றப்படியல்ல, அப்படியே ரோமைச்சபை இராயப்பரினல் ஸ்தாபிக்கப்பட்டாலும் தானென்ன? இயேசுநாதரும் எல்லா அப்போஸ்தலரும் கூடி, முதலாவது ஸ்தாபித்த எருசலேம் சபையே இல்லை என்று போனல், ரோமைச்சபைக்கு அதைவிட சலாக்கியம் என்ன? ரோமானித்தாரே ,நீங்களே சொல்லுங்கள்!

தாய்ச் சபை

ரோமைச்சபையே ஆதிச்சபை என்று ரோமான் மார்க்கத்தார் கண்ணை மூடிக்கொண்டு சொல்லுகிறார்கள். அவர்கள் தயவு செய்து கண்ணைத் திறந்து, பின்வரும் காரியங்களைப் பார்க்கவேண்டும்:—

கிறிஸ்துநாதர் பிறந்த இடம் பெத்லேகேம் வளர்ந்த இடம் நாசரேத்து; மரித்த இடம் எருசலேம். ஏறக்குறைய எல்லா அப்போஸ்தலரும் கலிலேயநாட்டார். அவர்களும் கிறிஸ்துநாதரும் முதலாவது பிரசங்கம் பண்ணினதும் அற்புதங்கள் செய்ததுமான இடம் கானன் தேசம். இராயப்பரின் ஒரே பிரசங்கத்தினல் 3000-பேர் வரையில் மனந்திரும்பின இடம் எருசலேம். அவர்கள் ஸ்பிரித்து சாந்துவாகிய பரிசுத்த ஆவியைப் பெற்ற இடம் எருச

லேம். அப்போஸ்தலர் முதலாவது சங்கம் கூடின இடம் எருசலேம். இந்தச் சங்கத்தில் தலைவராயிருந்த யாகப்பர் கண்காணியாய் இருந்த இடம் எருசலேம். ஆகையால் தாய்ச்சபை என்று தன்னைச் சொல்லிக்கொள்ளக்கூடிய சபை ஒன்று உண்டானால், அது எருசலேம் ஆகவேண்டிய தேயொழிய வேறொன்றும் அல்ல. அப்படியே இந்த எருசலேம் பரம எருசலேமுக்குக் குறிப்பென்று வேதமும் சொல்லுகின்றது. (கலா. 4:26.) எருசலேம் சபையே முதல் சபை ஆகவேண்டியதைக் குறித்து. மீகா. 4:2· லூக். 24:47 வசனங்களையும் பார்வையிட்டுக் கொள்ளுங்கள். எருசலேம் சபையிலிருந்துதான் மற்றெல்லாச் சபைகளும் உண்டானதென்று ஜெரோம் என்பவரும்பின்னும் அநேக பூர்விக சபைப் பிதாக்களும் சொல்லியிருக்கிறார்கள்.

எருசலேம் தாய்ச்சபை ஆகாவிட்டால், அந்தியோகு சபை தாய்ச்சபையாக வேண்டும். எப்படியென்றால் அந்தியோகியாவில்தான் சீஷர்கள் முதலாவது கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்பட்டார்கள். அந்தியோகியா சபைதான் ரோமைச் சபைக்கு முந்தி உண்டானது. மேலும் அது தான் பக்திக்கு மாதா என்றும். அப்போஸ்தல வரிசையு டையதென்றும், 400-ம் வருஷத்திலிருந்த கிறிஸ்தாஸம் என்னும் சபைப் பிதாவினாலும், 500-ம் வருஷத்திலிருந்த மாசில்லாமணி பாப்புவினாலும் சொல்லப்பட்டது.

அக்காலத்தில் கொன்ஸ்தன்புரி, அந்தியோகு, ரோமை, அலெக்சந்திரியா என்னும் நாலு சபைகள் மாத்திரம் பிரதானமானதும், ஒன்றுக்கொன்று அதிகாரத்தி லும் அந்தஸ்திலும் சரிசமானமுள்ளதாயுமிருந்தது.

மேலும் ரோமாபுரியில் சபை உண்டாவதற்கு முந் தியே பிரித்தானியா தேசத்தில் சபை உண்டாயிருந்த தென்று பேர்போன ரோமைச் சரித்திரக்காரனும், கர்தி னாலுமாகிய பாரானியஸ் (Paranius) என்பவர் சொல்லி யிருக்கிறார். இந்த பிரித்தானியா சபை கிறிஸ்துவுக்கு பிறகு 600-வருஷகாலமாய் ரோமைப் பிசோப்பின் கண்காணிப் புக்குள் இல்லாமல், சுதாவில் இருந்தது என்று எல்லாருக் கும் தெரியும்.

ரோமாபுரியில் சபை உண்டான காலத்திலேயே சின்ன ஆசியாவிலும், கிரேக்கை நாட்டிலும் சுமார் பத்துச் சபைகள் வரையில் உண்டானதாக நாம் நினைப்பதற்குப் போதுமான ஆதாரம் உண்டு.

இப்படிக்கெல்லாம் இருக்க, ரோமான் மார்க்கத்தாரே நீங்கள் ரோமைச் சபையை ஆதிச்சபை என்று சொல்வதற்கு ஆதாரம் எங்கே? இருந்தால் சொல்லுங்கள். இப்படி நாங்கள் அந்த விஷயத்தில் வேதத்தையும் நியாயத்தையும் எடுத்துக்காட்டிக் கேட்குப்போது, இதை நீங்கள் சாடையாய் விட்டுவிட்டு, ரோமான் சபைக்கு புரோட்டெஸ்டாண்டு சபை பிந்தினதுதானே என்றும், எங்கள் சபையிலிருந்துதான் உங்கள் சபை உண்டானது என்றும் சொல்வீர்கள். அப்படிச் சொல்வதற்கும் ஏதுவில்லை. எப்படியென்றால், "புரோட்டெஸ்டாண்டு" என்னும் வார்த்தை பிந்தினதேயொழிய அதினால் குறிக்கப்பட்ட மார்க்கம் பிந்தினதல்ல. சுத்த உபதேசத்தையுடைய கிறிஸ்தவர்களுக்கு புரோட்டெஸ்டாண்டர் என்னும் பெயர் எப்படி வந்ததென்றால், வேதத்தில் இல்லாததும், வேதத்துக்கு விரோதமானதுமான கொள்கையையும் சடங்காராதனையையும் உடையபேர்களும், வேதத்தில் இருக்கிறதும் வேதத்துக்கொத்த கொள்கையையும் சடங்காராதனையையுமுடைய பேர்களும். சங்கமாகக் கூடி மத விஷயங்களைக் குறித்துத் தர்க்கவாதஞ் செய்து பேசினதினால் அது யாதொரு முடிவுக்கு வராததினால் இன்னொரு சங்கத்தில் கூடிப்பேசித் தீர்த்துக்கொள்ளலாம், அதுவரையில் மதவிஷயங்களில் அவரவர் தங்கள் இஷ்டப்படி நடந்து கொள்ளலாம் என்று தீர்ப்புண்டாயிருந்தது. அப்படி இருக்கும்போது, 1529-ம் வருஷம் ஸ்பையர்ஸ் பட்டணத்தில் இரண்டாம் விசை கூடின சங்கத்தில், ஐந்தாம் சார்லஸ் சக்கரவர்த்தியும் பாப்புவுங் கூடி இன்னொரு பெரிய சங்கம் கூடிவரும் பரியந்தம், எல்லாரும் ரோமைச் சபையின் கோட்பாடுகளுக்கு அமைந்து நடக்கவேண்டும் என்று தீர்த்தார்கள். இந்தத் தீர்ப்புக்கு அடங்கமாட்டோம் என்று அநேகர் எதிர்த்து நின்றார்கள். இந்தக் காரணத்தினாலே அக்கால

முதல் இக்காலம் வரைக்கும். ரோமைச் சமையத்தை வெறுத்து விடுகிறவர்களுக்கு புரோட்டெஸ்டாண்டர் என்று பேர்உண்டாயிருக்கிறது. இதற்கு எதிர் மறுக்கிறவர்கள் என்று அருத்தம். காரியம் இப்படியிருப்பதால் கிறிஸ்துவின் காலமுதல் அவருடைய சுத்த உபதேசங்களில் மாத்திரம் நிலைத்துவருகிற கிறிஸ்தவர்களாகிய புரோட்டெஸ்டாண்டு மார்க்கத்தார், ரோமான் மார்க்கத்தாராகிய உங்களுக்கு முந்தினவர்கள் என்று நியாயமாய் எண்ணுங்கள்.

இதையும் கவனியாமல், லூத்தருக்கு முன்னே புரோட்டெஸ்டாண்டு மார்க்கம் ஏதென்று பின்னும் கேட்பீர்கள். இந்தக் கேள்விக்குப் பதிலாக நாங்களும் உங்களைப் பார்த்து 606-ம் வருஷத்திலிருந்த போக்காஸ் என்ற இராயனுக்கும், பொனிப்பாஸ் என்ற பாப்புவுக்கு முன்னே, ரோமான் மார்க்கம் ஏதென்று கேட்பது அதிக நியாயமாய் இருக்கிறது. ஒருவனைப் பார்த்து உன் முகம் கழுவப்படாததற்கு முன் அது எங்கே இருந்ததென்று கேட்டால், அது இருந்த இடத்தில்தான் இருந்ததென்று அவன் சொல்லுவான். அதுபோல உலக ரக்ஷகர் ஸ்தாபித்த மார்க்கம் இருந்த பிரகாரமே இருக்க, இடையிலே வந்த பாப்புக்களும் ராஜாக்களும் மூப்புத்தனம் பண்ணி, அதிகாரத்தோடே சங்கங்களைக் கூடிவரச் செய்து இப்படி அப்படிச் செய்தால் அதுவெல்லாம் சர்வேஸ்பரனுடைய சித்தத்துக்கும் மகிமைக்கும் சரியாயிருக்கும் என்று அநேக பிசகான கொள்கைகளை ஏற்படுத்தி, அந்த ஆதிச் சபையின் சுயதன்மையைக் கெடுத்துப்போட்டார்கள். லூத்தர் அதைப் பார்த்து, தன் உயிருக்கு மோசம் வந்தாலும் வரட்டும் என்று தைரியமாய் நின்று, மறைக்கப்பட்டிருந்த ஆதிவேதத்தை வெளிக்குக் கொண்டு வந்து, அதில் அடங்கிய மூல உபதேசங்களுக்கும், 600-வருஷங்களுக்குப் பிந்தி பாப்புக்கள் கட்டியிருந்தஉபதேசங்களுக்கும் உள்ள வித்தியாசங்களை எடுத்து ரூபித்துக் காட்டி, சத்திய வேதத்தின் சுயதன்மையை விளக்கித் திருச்சபையை அதின் ஆதிச் சீருக்குக் கொண்டு வந்தார். சுத்தத் தங்கத்தின் பேரில் படிந்திருந்த தூசியை லூத்தர் ஊதினார். அழுக்குப்பட்டுப் போயிருந்ததை லூத்தர் கழுவினார்.

இயேசுநாதர் தேவாலயத்தைக் கெடுத்தபேர்களை எப்படிச் சவுக்குப் பூசை கொடுத்துத் துரத்திப் போட்டாரோ, அப்படியே லுத்தர் வேதத்துக்கு அடாதவைகளை எடுத்துக் காட்டினார். ஆகையால் இந்த யதார்த்தவாதி வெகு ஜன விரோதியானார்.

இந்த உத்தமன் ஐசலிபன் ஊரிலே 1546-ம் வருஷம் பெப்ரவரி மீ 18 உ மனப்பாக்கியத்துடன் மரித்தார். அவர் திரேகம் விற்றம்பர்க்குப் பட்டணத்தில் அடக்கம் பண்ணப்பட்டிருக்கிறது. அப்படி இருக்க, அவன் கொல்லையிலிருந்த ஒரு குழியிலே விழுந்து செத்துப் போனான் என்று நீங்கள் ஈங்கிஷையாகச் சொல்லி வருகிறீர்கள். அப்படி அவர் சாகவில்லையே. அதுபோகட்டும். இயேசுநாதர் கள்ளரோடே சிலுவையில் அறையப்பட்டிருந்தும், இராயப்பர் தலைகீழாகச் சிலுவையில் அறையப்பட்டிருந்தும் அவர்களைப் பற்றி ஈங்கிஷையாக எண்ணி வருகிறீர்களா?

மேலும் லுத்தரை வைத்து நாங்கள் பூசிக்கிறோமா? அவர் எழுதியவைகளை வேதமாக நாங்கள் கொள்ளுகிறோமா? ரோமன் மார்க்கத்தாராகிய நீங்களோ லுத்தர் முதல் உண்டான சங்கங்களில் பிறந்த தீர்ப்புகளையே வேதம் போல ஒப்புக் கொண்டு வருகிறீர்கள். எங்கள் வேதமோ இரக்ஷகரின் திருவாயிலிருந்து உதிர்ந்த வசனங்களும், அவைகளை அநுசரித்து அவரால் நியமிக்கப்பட்ட அப்போஸ்தலர் எழுதின வசனங்களும்தான். காரியம் இப்படியிருப்பதால், எது முந்தின சபை என்று சீர்தூக்கிப் பாருங்கள். ரோமாபுரிச் சபையே ஆதிச்சபை என்று நீங்கள் சொல்லிக் கொண்டாலும் சுகிர்தம் என்ன? அஞ்ஞான மார்க்கம் யூதமார்க்கத்துக்கும் கிறிஸ்து மார்க்கத்துக்கும் முந்தினதாய் இருக்கிறது. அதினால் அந்த மார்க்கத்தில் இருப்பவர்களுக்குப் பிரயோஜனம் என்ன? ஆதிச்சபையைச் சேர்ந்தவர்கள் என்பதில் யாதொரு பிரயோசனம் இல்லை. ஆதி வேதத்தின்படி நடப்பதினால் மாத்திரம் பிரயோசனம் உண்டு. ஆகையால் ரோமான் மார்க்கத்தாரே இடையில் வந்த சங்கங்களின் ஏற்பாட்டையும் கட்டுப்

பாட்டையும் நீங்கள் விட்டு விடுங்கள். இயேசுநாதருடைய மார்க்கம் உலகத்தின் நாலா திசைகளிலும் ஸ்தாபிக்கப்பட்டு பற்பல சங்கப்பேர்களால் சொல்லப்பட்டு வருகிறது. ஆனால் அவைகளில் எந்தெந்தச் சபை, சபாநாயகராகிய கிறிஸ்துவின் ஆவியையும் சித்தத்தையும் உடையதாய், தங்கள் மகிமையை நாடாமல் அவருடைய மகிமையைத் தேடி, அவர் கிருபையாய்த் தந்தருளிய வேதத்தில் மாத்திரம் இருக்கிற உபதேசங்களைக் கைக்கொண்டு வருகிறதோ, அந்தச் சபைகளே அவருடைய மார்க்கத்தைச் சேர்ந்தவைகள் என்று அறியுங்கள். தாயைப்போல் பிள்ளை நூலைப்போல் சேலை அல்லவா? பொன்னின் மாற்றை உரை கல்லைக் கொண்டும், மரத்தின் தன்மையை அதின் கனியைக் கொண்டும் சோதித்து அறியும் வண்ணமாய், அறிந்து தெளிவடையுங்கள்.

ஏக சபை

ரோமச்சபையில் ஒரே மேய்ப்பனும் ஒரே மந்தையும் உண்டாயிருக்கிறதென்றும், புரோட்டெஸ்டாண்டு சபையில் பல மேய்ப்பரும் அநேக பிரிவினையான மந்தையும் உண்டென்றும் ரோமான் மார்க்கத்தார் சொல்லுகிறார்கள்.

வெவ்வேறு பேருள்ள சபைகள் இருப்பதினால் திருச்சபையின் ஐக்கியம் வேறுபடாது. எப்படியென்றால், பூர்வீகத்திலும், ரோமைச்சபை, கொரிந்து சபை, கலாத்திய சபை, எபேசு சபை, தெசலோனிக்க சபை, எருசலேம் சபை, அலெக்சந்திரிய சபை என்று பல பெயருள்ள சபைகள் இருந்தும், அவைகளெல்லாம் கிறிஸ்துவில் ஐக்கியமாய்த்தான் இருந்தது. ஒரு மரத்துக்குப் பல கொப்புகள் இருந்தபோதிலும், அவைகள் யாவும் மரத்தோடு ஐக்கியப்பட்டிருப்பது போலும், ஒரு பட்டாளத்தில் அநேக பிரிவுகள் இருந்தபோதிலும், பட்டாளம் ஒன்றுயிருப்பது போலும், ஒரு தகப்பனுக்குப் பலபேருள்ள பிள்ளைகள்

இருந்த போதிலும், அவர்களெல்லாருக்கும் தகப்பன் ஒன்ருய் இருப்பது போலும், கிறிஸ்துவின் நாமத்தினல் பல பேருள்ள அநேக சபைகள் உலகத்தில் உண்டாயிருந் தாலும், அவைகளெல்லாம் அவரில் ஐக்கியப்பட்டிருக் கிறது. அவரே அவைகளுக்குத் தலைவராய் இருக்கிருர். இயேசு கிறிஸ்துவை உண்மையாய் விசுவாசித்து, அவர் ஏற்படுத்தின நியமங்களை மாத்திரம் எந்தெந்தச் சபைகள் அநுசரித்துவருகிறதோ, அந்தந்தச் சபைகளில் இருக்கிற யாவரும் ஏக சபையில் சேர்ந்தவர்களாய் இருக்கிருர்கள் என்று அறியுங்கள்.

மேலும் புரோட்டெஸ்டாண்டு மார்க்கத்தார் ஒருவ ருக்கொருவர் கொள்கையில் விகற்பப்பட்டவர்களாய் இருப்பதின் நிமித்தம் அவர்கள் ஐக்கியமுள்ளவர்கள் அல்ல என்று ரோமானித்தார் சொல்லவருவார்கள். இர க்ஷிப்புக்கு அவசியம் வேண்டிய உபதேசங்களில் அவர்கள் விகற்பப்படவில்லை. ரோமைச்சபையிலும். சேசுவியர், ஜான்செனித்தர், தோமினிக்கர். பிரான்சிஸ்கர், அகஸ் தினர். பெனிடிக்கர், கார்மேலர் முதலான பிரிவையுடைய வர்களாய் இருக்கிருர்கள். தெரிந்துகொள்ளுதல் என்னும் உபதேசத்தில். புரோட்டெஸ்டாண்டு வகுப்பில் கல்வீன ருக்கும், ஆர்மீனியருக்கும் வித்தியாசம் இருப்பதுபோல, ரோமான் மார்க்க வகுப்பைச் சேர்ந்த இயேசு சபையா ருக்கும், ஜான்செனித்து சபையாருக்கும் இந்நாள் பரியந் தம் இந்தக் கொள்கையில் வித்தியாசம் உண்டு இதுவு மல்லாமல் பாப்பானவருக்கு இருக்கிறதாகச் சொல்லிக் கொள்ளுகிற தவருமையைக் குறித்து ரோமானித்தாருக் குள் சிலருக்கு ஒருவிதமான கொள்கையும் வேறு சிலருக்கு வேறு விதமான கொள்கையும் உண்டு.

காரியம் இப்படி இருப்பதால். கிறிஸ்தவர்கள் ஐக்கிய முள்ளவர்களாய் இருக்கவேண்டும் என்று சொல்லும் போது, தலையோடே சரீரமும்,மரத்தோடே கொப்புகளும், புருஷனேடே பெண்சாதியும் ஐக்கியப்பட்டிருப்பதுபோல, கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவோடே ஐக்கியமாயிருந்து, சகல கிறிஸ்தவர்களும் வேதவாசிப்பிலும், விசுவாசத்திலும், ஜெபத்திலும் அன்பிலும், ஆவியிலும் ஐக்கியமுள்ளவர்

களாய் இருக்கவேண்டும். நாம் இவ்விதமாய் ஐக்கியமுள்ளவர்களாய் இருக்கவேண்டியதைக்குறித்து எபே. 3:17; யோவா. 15:7; அப் 1:14; ரோம 12:9-10; 1 கொ. 6:17 முதலிய வசனங்களை வாசித்துப்பார்த்துத் தெளிவடையுங்கள்.

திருச்சபைத் தலைமை

"நீ பேதுருவாய் இருக்கிறாய், இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை" (மத். 16:18.) என்னும் வாக்கியத்தைக்கொண்டு இராயப்பருக்கும், அவருக்குப் பின்னால் பாப்புகளுக்குந் தலைமை உண்டென்று ரோமான் மார்க்கத்தார் சாதிக்கிறார்கள்.

இந்த வசனத்தின் கருத்தை நாம் திட்டமாய் அறிய வேண்டுமானால், அதற்கு முந்தின வாக்கியத்தில் இயேசுநாதர் சீஷர்களை நோக்கிக் கேட்ட கேள்வியைப் பார்க்க வேண்டும். அதாவது: "அவர்: நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள் என்று கேட்டார். அதற்கு சீமோன் பேதுரு, நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து" என்றான். இதற்கு மறுமொழியாகத்தான் இயேசுநாதர் இந்த வசனத்தைச் சொன்னார். இந்தக் கல் பேதுருவைக் குறிக்கிறது என்று ரோமானித்தார் சொல்லுகிறார்கள். புரோட்டெஸ்டான்டராகிய நாங்களோ அது இயேசுநாதரைக் குறிக்கிறது என்று சொல்லுகிறோம். இதற்கு நாங்கள் சொல்லுகிற முகாந்தரம் என்னவென்றால், முதலாவது: இந்த வசனத்தில் பாஷை நடை போலவே, இயேசுநாதர் தேவாலயத்தைக்குறித்துப் பேசும்போதும் பேசியிருக்கிறார். எப்படி என்றால், "இந்த ஆலயத்தை இடித்துப்போடுங்கள். மூன்று நாளைக்குள்ளே இதை எழுப்புவேன்" என்றார். (யோவா 2:19-21.) இந்த ஆலயம் எருசலேமின் ஆலயத்தைக் குறித்ததாக யூதர்கள் எப்படித் தப்பிதமாக எண்ணினார்களோ அப்படியே "இந்

தக் கல்'' என்பது இராயப்பரைக் குறிக்கிறதாக ரோமானித்தார் தப்பிதமாக நினைக்கிறார்கள். இந்த இரண்டு வசனங்களிலும் இயேசுநாதர் தம்மைக் குறித்தே பேசினார் என்று திட்டமாய் அறியுங்கள்.

இரண்டாவது: ''நீ பேதுருவாய் இருக்கிறாய், இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன்'' என்பதை மூல பாஷையிலே பார்த்தால், அந்தக் கல் என்பது பேதுருவைக் குறிக்காமல், அவன் அறிக்கையிட்ட கிறிஸ்துவாகிய அந்தச் சத்தியத்தையே குறிக்கிறது எப்படி என்றால், ''நீ பேதுருவாய் இருக்கிறாய்'' என்னும் வசனத்தில், பேதுருவுக்கு (Petros) பெத்ரோஸ் என்றும், ''இந்தக் கல்லின் பேரில்'' என்னும் வசனத்தில் கல்லுக்கு (Petra) பெத்ரா என்றும் சொல்லியிருக்கிறார் பிற்காலத்தில் ரோமான் மார்க்கத்தார் இந்த வசனத்தைத் தப்பிதமாக அருத்தம் பண்ணுவார்கள் என்று இயேசுநாதர் முன்னமே அறிந்து, தமது திருவாயினால் அந்த வசனத்தில் இரண்டு வித்தியாசமான வார்த்தைகளை வழங்கியிருக்கிறார் என்று அறியுங்கள்.

மூன்றாவது: இராயப்பர் திருச்சபைக்குத் தலைவர் என்று வேதத்தில் வேறெந்த வசனங்களிலும் சொல்லப்படவில்லை. இயேசுநாதரே தலைவர் என்று அநேக இடங்களில் சொல்லப்பட்டு இருக்கின்றது. அவற்றுள் ஏசாயாவின் தீர்க்கதரிசனத்தில், ''இதோ, அஸ்திபாரமாக ஒரு கல்லை நான் சீயோனிலே வைக்கிறேன், அது பரீட்சிக்கப்பட்டதும், விலையேறப்பெற்றதும், திட அஸ்திபாரமுமான மூலைக்கல்லாய் இருக்கும், விசுவாசிக்கிறவன் பதறான்'' என்று சொல்லி இருக்கிறது. (ஏசா. *28:16*) இந்தக்கல் இயேசுகிறிஸ்துநாதர்தானே என்று இராயப்பரும் சொல்லியிருக்கிறார். (*1* பேது. *2:6*) ''போடப்பட்டிருக்கிற அஸ்திபாரமாகிய இயேசுகிறிஸ்துவை அல்லாமல் வேறே அஸ்திபாரத்தைப் போட ஒருவனாலும் கூடாது'' என்று சின்னப்பரும் சொல்லியிருக்கிறார். (*1* கொரி. *3:11.*)

நாலாவது: இராயப்பரைத் திருச்சபைக்குத் தலைவராக வைத்துப் பார்த்தாலும் பொருள் இல்லை: எப்படி

என்றால், திருச்சபைக்காகப் பாடுபட்டு மரணம் அடைந்து உயிர்த்தெழுந்து பிதாவினிடத்தில் பரிந்துபேசி, அதை நியாயப்பிரமாணத்தின் சாபத்தில் இருந்து விலக்கி இரக்ஷிக்கிறவர் இயேசுநாதராய் இருக்கிறார். ஆகையால் அவரே திருச்சபைக்குத் தலைவராகவேண்டும். இராயப்பர் திருச்சபைக்கு இந்த விதமாக யாதொன்றும் செய்யவில்லை.

மேலும் இயேசுநாதரே சர்வவியாபகமும், சர்வஞானமும், சர்வ வல்லமையும் உள்ளவராயும் இருந்து, தமது திருச்சபைக்குச் சகல இடங்களிலும் நேரிடும் மோசங்களில் இருந்தும், அதை எதிர்க்கும் சத்துருக்களில் நின்றும் தற்காக்க வல்லமையுள்ளவராய் இருக்கிறார். இராயப்பர் திருச்சபைக்குத் தலைவராய் இருப்பதினால் இப்பேர்ப்பட்ட காரியங்களை நடப்பிக்க அவரால் கூடாது என்று நீங்களே அறிவீர்கள். இயேசுநாதரே இம்மையிலும் மறுமையிலும் திருச்சபைக்குத் தலைவராய் இருக்கிறார் என்பதைக்குறித்து, சின்னப்பர் எபேசியருக்கு எழுதின நிருபம் முதலாம் அதிகாரம், 19-முதல் 22-ம் வசனம் வரையில் வாசித்துத் தெளிவடையுங்கள்.

மேலும், தலையோடே சரீரமும், மரத்தோடே கொப்புகளும், புருஷனோடு பெண்சாதியும் ஐக்கியப்பட்டு இருப்பதுபோல, இயேசுநாதரோடே மெய்க்கிறிஸ்தவர்கள் ஐக்கியப்பட்டு இருக்கிறார்கள் என்று வேதம் சொல்லுகிறதே அல்லாமல், அவர்கள் இராயப்பரோடே ஐக்கியப்பட்டு இருக்கிறார்கள் என்று ஓரிடத்திலும் சொல்லவில்லை. இப்படி அர்ச்சியசிஷ்ட இராயப்பரே திருச்சபைக்குத் தலைவர் அல்ல என்று ரூபகாரமாய் இருக்க, பாப்பானவர் தலைவராவது எப்படி? அர்ச்சியசிஷ்ட பாப்பானவர் திருச்சபைக்குத் தலைவர் என்ற கொள்கை கி. பி 600 வருஷத்துக்குப் பிந்தி உண்டானதேயல்லாமல், அதற்கு முந்தி இல்லை. இப்படி இருக்க ரோமான் மார்க்கத்தாரே, ஏன் வேதத்துக்கு விரோதம் செய்கிறீர்கள்? கிறிஸ்துவே சபைக்குத் தலைவர் என்று வேதத்தில் வெகு திட்டமாய்ச் சொல்லியிருக்க, நீங்கள் பாப்புதான் தலைவர் என்று தேவ தூஷணமும்

பொய்யுமாக ஏன் சொல்லுகிறீர்கள்? சபையாகிய சரீரம் ஒன்றுதானே, அதற்கு இரண்டு தலையைக் கொண்டுவந்து ஏன் வைக்கிறீர்கள்?

கிறிஸ்துநாதர் சரீரத்தோடே பூமியிலே இருந்து ஆளவில்லை; ஆகையால், அவருக்குப் பதிலாகப் பாப்பானவரைத் தெரிந்து கொண்டோம் என்று ரோமான் மார்க்கத்தாரில் சிலர் சொல்லுகிறார்கள். அவர்கள் இயேசுநாதருடைய வாக்கைக் கேட்கட்டும். "இதோ, உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன்" என்றார் என்றும், (மத்தேயு 28:20) "எங்கே இரண்டு பேர் அல்லது மூன்று பேர் கூடி இருக்கிறார்களோ, அவர்கள் நடுவில் இருப்போம்" என்றும் சொல்லியிருக்கிறார்

பிரியமான ரோமானித்தாரே, வேத சத்தியம் இப்படி இருக்க, நீங்கள் அதை எல்லாம் தள்ளிப் போட்டு, அர்ச்சியசிஷ்ட பாப்புதான் திருச்சபைக்குத் தலைவர் என்றால் நாங்கள் என்ன சொல்லலாம்? "அவன் எதிர்த்து நிற்கிறவனும், தேவன் என்னப்படுவது எதுவோ, ஆராதிக்கப்படுவது எதுவோ, அவை எல்லாவற்றிற்கும் மேலாகத் தன்னை உயர்த்துகிறவனும், தேவனுடைய ஆலயத்தில் தேவன்போல உட்கார்ந்து, தன்னைத்தான் தேவன் என்று காண்பிக்கிறவனும் இருப்பான்" "அவனைக் கர்த்தர் தம்முடைய வாயின் சுவாசத்தினாலே அழித்து தம்முடைய வருகையின் பிரசன்னத்தினாலே நாசம் பண்ணுவார்" என்று (2 தெச. 2:4-8) வசனங்களில் சொல்லப்பட்டிருக்கிற சத்தியம் யாருக்குச் செல்லும் என்று நீங்களே யோசித்துப் பார்த்து இயேசுவை மாத்திரம் திருச்சபைக்குத் தலைவர் என்று கொள்ள உங்களை மன்றாடிக் கேட்கிறோம்.

ரோமைச் சபையின் அப்போஸ்தலிக் தொடர்ச்சி

அப்போஸ்தலிக் தொடர்ச்சி என்றால், யாதொரு சிதைவும் மாறுதலும் இல்லாமல், அப்போஸ்தலர் கால முதல் நாளது வரையில் சங்கிலித் தொடர்போல ஒன்றின் பின் ஒன்றாகக் குருப்பட்டம் பெற்று வருவதே அதின் அர்த்தம் என்று ரோமான் மார்க்கத்தார் சொல்லுகிறார்கள். குருப்பட்டம் இவ்விதமாக, ஆதிமுதல் அபிஷேகம் பெற்றவர்களால் பெறவேண்டியதில்லை அப்படிப்பெற்று வரவேண்டும் என்று வேதத்தின் ஓரிடத்திலாகிலும் சொல்லப்படவும் இல்லை. எபேசு பட்டணத்துக்கு முதல் கண்காணியாய் இருந்த தீமோத்தேயு என்பவரைத் திருச்சபையில் உள்ள மூப்பர்கள் கூடிப் பட்டங்கொடுத்ததாக அர்ச்சியசிஷ்ட சின்னப்பர் எழுதியிருக்கிறார். (1 தீமோ. 4:14.) அப்போஸ்தலிக் சாதாரண திருச்சபை என்பதின் சுயகருத்து என்னவென்றால், அப்போஸ்தலர்கள் என்னத்தை எழுதினார்களோ, என்னத்தைக் கைக்கொண்டார்களோ என்னத்தை விசுவாசித்தார்களோ, அவைகள் எல்லாவற்றையும் யாதொரு பிசகு இல்லாமல், எந்தச்சபை ஒப்புக் கொண்டு விசுவாசித்து நடக்கிறதோ, அதுவே அப்போஸ்தலிக் சாதாரண திருச்சபை. இப்படிப்பட்ட சபை ரோமான் சபையோ? புரோட்டெஸ்டாண்டு சபையோ என்று நீங்கள் சோதித்துப் பாருங்கள் சர்வேஸ்பரன் இரண்டு தேவதிரவிய அநுமானங்களை நியமித்திருக்க, நீங்கள் வேறு ஐந்து திரவிய அநுமானங்களையும் சேர்த்து அநேக பாப்புக் கட்டளைகளையும் ஏற்படுத்தி, இவ்விதமாக ஆதித் திருச்சபையின் கொள்கையில் இருந்து நீங்கிப் போனீர்களே. அப்படி இருக்க, நீங்கள் அப்போஸ்தலிக் சபை என்று எப்படிச் சொல்லலாம்? பட்டம்பெற்ற குருவினால் புண்ணியமோ? குரு சொல்லியபடி செய்வதினால் புண்ணியமோ? நியாயாதிபதி சொல்வதெல்லாம் சட்டத்திற்கு இசைந்திருக்க வேண்டுமே. சட்டத்திற்கு இணங்காததை அந்த நியாயாதிபதி சொல்லியும் சபலம் என்ன? புதிய ஏற்பாட்டில் இருக்கிறதும், பூர்வ முதல் நாளது வரையில் மெய்க்கிறிஸ்தவர்கள் கைக்கொண்டு வருவதுமான ஏற்பாடுகள் என்னவென்றால்:—

முதலாவது: அப்போஸ்தலர்கள் ஏற்படுத்தப்பட்டு, அவர்கள் சுவிஷேத்தைப் பிரசங்கம் பண்ணிக்கொண்டு வந்தார்கள். (மத். 28:19, 20.) அப்படியே புரோட்டெஸ்டாண்டு மார்க்கத்தில் மிஷனெரிமார்கள் ஏற்படுத்தப்பட்டு அவர்கள் உலகமெங்கும் போய்ச் சுவிசேஷத்தைப் பிரசங்கம் செய்துகொண்டு வருகிறார்கள். ரோமான் மார்க்க மிஷனெரிமார்களோ, வீடுகளிலும், கோவில்களிலும் இருந்துகொண்டு, பூசைகள் பண்ணுகிறதும், பாவங்களுக்கு மன்னிப்புகள் கொடுக்கிறதும், சப்பரங்கள், தேர்த் திருவிழாக்கள் நடத்துகிறதும், வேடிக்கைகள் செய்கிறதுமான முயற்சிகளில் மும்முரமாய் இருக்கிறார்கள். அப்போஸ்தலர் இப்படிச் செய்தார்களா?

இரண்டாவது: பூர்வீக திருச்சபையில் தேவனை மாத்திரம் நோக்கி ஜெபம் செய்யும் வழக்கம் இருந்தது. (மத். 6:6; யோவான் 16:23, 24; கொலோ 2:19.) இந்தப் பிரதானமான வாக்கியங்களை எடுத்து வாசித்துப் பாருங்கள். அப்படியே புரோட்டெஸ்டாண்டு கிறிஸ்தவர்களுக்குள் தனி ஜெபம், குடும்ப ஜெபம், கோவிலில் ஜெபம் நடத்தப்பட்டு வருகிறது ரோமானித்தாரோ ஜெபத்தை எழுதி அதை மனப்பாடம் பண்ணி, இன்னின்னாருக்கு இத்தனை மணி ஜெபம் என்று கணக்கிட்டு, சக்கரம் மேலும் கீழுமாக சுழல்வது போல் ஒரு ஜெபத்தை பலதரமும் சொல்லி வருவதும் அல்லாமல் அந்த ஜெபங்களை கோவில்கள், கல்லறைகள், சிலுவைகள், சொரூபங்கள், இன்னும் சம்மனசுக்களை நோக்கியும் செய்து வருகிறார்கள். இப்படிச் செய்யும்படியாக பழைய ஏற்பாட்டிலாவது, புதிய ஏற்பாட்டிலாவது, இயேசுநாதர் மாதிரியாகச் சொல்லிக் கொடுத்துப் போன ஜெபத்திலாவது, பூர்வீக திருச்சபையிலாவது இல்லை.

மூன்றாவது: பூர்வீக திருச்சபை தங்கள் ஆராதனையில் தேவனைத் துதிக்கும் பாட்டுகளை மாத்திரம் பாடிவந்தார்கள். (கொலோ. 3:16.) அப்படியே புரோட்டெஸ்டாண்டு சபையில் பாடப்பட்டு வருகிறது. ஆனால், ரோமான் மார்க்கத்தில் பாடப்படும் பாட்டுகளில் கொஞ்சம் குறைய யாவும், சம்மனசுக்கள் பேரிலும், மரியம்

மாள் பேரிலும், அர்ச்சியசிஷ்டர்கள் பேரிலும் பாடப்பட்டு வருகிறது. இப்பேர்பட்ட பாட்டுகள், வேதத்திலும் அப்போஸ்தலரின் வாயிலும் காணப்படவில்லை.

நாலாவது: பூர்வீகத்தில் ஓய்வுநாள் மாத்திரம் விசேஷ நாளாக எண்ணப்பட்டு வந்தது. (யாத்.20:8-11.) அதை ஆதிகிறிஸ்தவர்கள் வெகு பயபக்தியாய்க் கைக்கொண்டு வந்தார்கள். அப்படிப்போல புரோட்டெஸ்டாண்டு கிறிஸ்தவர்கள் அந்த நாளைமாத்திரம் விசேஷ நாளாகஎண்ணி, அதைப் பயபக்தியாய்க் கைக்கொண்டு வருகிறார்கள். ரோமான் மார்க்கத்தாரோ. ஓய்வுநாளுடன் வருஷத்தில் பின்னும் அநேக நாட்களையும் விசேஷ நாட்களாக எண்ணி, அவைகளில் தேர், சப்பரம், நாடகம் முதலானது நடத்தி, பல வேடிக்கைகள் செய்து வருகிறார்கள். பூர்வீக கிறிஸ்தவர்கள், ஓய்வுநாளிலேயாவது, மற்றக் காலங்களிலேயாவது இப்பேர்ப்பட்ட செய்கைகள் செய்துவந்தார்களா?

ஐந்தாவது: பூர்வீகத்தில் கிறிஸ்தவர்கள் ஞானஸ்நானம், நற்கருணை என்ற இரண்டு ஏற்பாட்டை மாத்திரம் கைக்கொண்டு வந்தார்கள். (1 கொரி. 11:23-26; மத். 28:19, 20.) அப்படியே புரோட்டெஸ்டாண்டு கிறிஸ்தவர்கள் அந்த இரண்டையும்தான், எக்காலத்திலும் எந்தத் தேசத்திலும் கைக்கொண்டுவருகிறார்கள். ரோமானித்தாரோ, கிறிஸ்தவர்கள் கைக்கொள்ள வேண்டிய தேவதிரவிய அநுமானங்கள் ஏழு என்றும் சொல்லி, அவைகளில் வேதத்துக்கும் புத்திக்கும் விரோதமான அநேக வீண்பக்திக்குரிய சடங்குகளையும் பிணைத்துப் போதித்து வருகிறார்கள்.

பிரியமான ரோமான் மார்க்கத்தாரே, இப்போது எந்தச் சபை ஆதிச்சபையின் ஒழுங்கையும, வரிசையையும அநுசரிப்பையும் உடையதாய் இருக்கிறதென்று நீங்களே பரிசோதித்துப் பாருங்கள். இப்பேர்பட்ட நூதன ஏற்பாடுகளையுடைய நீங்கள் ஆதிச் சபையைச் சேர்ந்தவர்கள் என்றும், அப்போஸ்தலர் வரிசையில் வந்தவர்கள் என்றும் இனி ஒருபோதும் பெருமையாகச் சொல்லாதிருங்கள்.

திறவுகோல்

"பரலோகத்தின் திறவுகோல்களை நான் உனக்குத் தருவேன்; பூலோகத்திலே நீ கட்டுகிறது எதுவோ, அது பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும்; பூலோகத்திலே நீ கட்டவிழ்ப்பது எதுவோ, அது பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும்" என்றார். மத். 16:19.)

இரக்ஷகர் பேதுருக்குச் சொன்ன இந்த வாக்கியத்தைக்கொண்டு, ரோமான மார்க்கத்தார் தங்கள் பாப்புவுக்குப் பரலோக அதிகாரமும், பூலோக அதிகாரமும் உண்டென்றும் அவர் எந்தெந்தக் காலத்தில் என்னென்ன கொள்கைகளை ஏற்படுத்துவாரோ, அவையெல்லாம் தேவனால் ஏற்படுத்தப்பட்டவைகளைப்போல் ஒப்புக்கொள்ளவேண்டும் என்றும் சொல்வதும் அல்லாமல், இப்போது ரோமான் மார்க்கத்தில் வேதத்தில் இல்லாததும் அதற்கு விரோதமானதுமான அநேக உபதேசங்களுக்கும், கட்டளைகளுக்கும், சடங்கு ஆராதனைக்கும் ஆதாரமாக இந்த வசனத்தையே கொண்டுவருகிறார்கள். ஆகையால் இந்த வசனத்தின் கருத்தை நாம் நன்றாய் அறிந்துகொள்ள வேண்டும்.

இந்த வசனத்தில் திறவுகோல் என்பது அதிகாரத்தைக் குறிக்கின்றது. (வெளி. 1:18; 3:7.) பரலோகராஜ்யம் என்பது, பூலோகத் திருச்சபையைக் குறிக்கிறது. (மத். 3:2.) ஆகையால் பரலோக ராஜ்யத்தின் திறவுகோல்களை உனக்குத் தருவேன் என்பது, பூலோகத்தில் விசுவாசத்தின் கதவைத் திறப்பதற்கு அதிகாரத்தை உனக்குத் தருவேன் என்று அர்த்தம் ஆகிறது. அப்படியே இராயப்பர் தான், முதலாவது யூதர்களுக்கும் புறஜாதியாருக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, இயேசுகிறிஸ்துவின்பேரில் வைக்கும் விசுவாசத்தின் கதவைத் திறந்தார். இதைப் பற்றி அப்போஸ்தலர் நடபடி, 2-ம் அதி. 14-36 வசனங்களையும், பத்தாம் அதிகாரம் முழுவதையும் வாசித்துப் பார்க்கவும். இந்த இருவகையான ஜனங்களுக்குச் சுவிசேஷத்தை முதலாவது அறிவிக்கும் கனத்தைமாத்தி

ரம் இராயப்பருக்குக் கொடுத்தாரே அல்லாமல்: கட்டவும் கட்டவிழ்க்கவுமான அதிகாரத்தை எல்லா அப்போஸ்தலருக்கும் சாதாரணமாய்க் கொடுத்திருக்கிறுர் என்பதற்கு எள்ளளவேனும் சந்தேகம் இல்லே. (மத். 18:18; யோவா. 20: 22, 23.)

கட்டவும் கட்டவிழ்க்கவும் என்ற சொற்களின் கருத்து என்னவென்றுல் அப்போஸ்தலர் செய்யும் காரியங்கள் தேவனுல் ஒப்புக்கொள்ளப்படும் என்பதுதான். அப்படியே அவர்கள் சுன்னத்தையும் விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டவைகளேயும், வேசித்தனத்தையும், நெருங்குண்டு செத்ததையும், இரத்தத்தையும் விலக்கிஞர்கள். சபைகளே ஸ்தாபித்தார்கள் சபையார் செய்யவேண்டிய கடமைகளேயும் சடங்குகளேயும் ஏற்படுத்திஞர்கள். இயேசுநாதர் இராயப்பரை முதன்மையாக வைத்தால், அவர் அவனுக்குத் திறவுகோல்களேக் கொடுத்தபிறகு சீஷர்களுக்குள்ளே எவன் பெரியவன் என்ற வாக்குவாதம் உண்டாகமாட்டாது இயேசுநாதர் இராயப்பரை முதலிலேயாவது தெரிந்துகொள்ளவில்லே. எருசலேமிலே அப்போஸ்தலர் முதல் முதல் கூடின சங்கத்தில் யாகப்பர் தலேவராய் இருந்தாரே அல்லாமல், இராயப்பர் தலேவராய் இருக்கவும் இல்லே, பேசப்பட்ட காரியங்களே அவர் முடிவுகட்டவும் இல்லே. (அப் 15-ம் அதி.) நீங்கள் சொல்லுகிறபடி அவர் திறவுகோலின் அதிகாரத்தையும் தலேமையையும் உடையவராய் இருந்தால் சின்னப்பர் அவரை சபைக்கு முன்பாக இட்டுக்கொண்டு குற்றப்படுத்தி முகமுகமாய் எதிர்க்கவும் மாட்டார். (கலா. 2:11.) இராயப்பர் எழுதின இரண்டு நிருபங்களில் எங்கேயாவது அவர் தமக்குத் தலேமை உண்டென்று சொந்தம் பாராட்டவும் இல்லே; அதைப் பாப்புவினிடத்திலேயாவது, மற்ற யாரிடத்திலேயாவது கொடுத்துவிட்டுப்போகிறேன் என்றும் அவர் எழுதியிருக்கவும் இல்லே; எந்தப் பாப்புகளின் முகத்தையாவது இராயப்பர் கண்டதும் இல்லே. அவர் இறந்து, 539 வருஷங்களுக்குப் பிந்திதான் பாப்புக்கள் உண்டாஞர்கள். ஆகையால் பன்னிரண்டு அப்போஸ்தலரும் உலகத்திற்கு இரக்ஷண்யத்தைக் கூறும்படி அனுப்பப்பட்ட விஷயத்தி

லும் அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட உத்தரவிலும், அதிகாரத்திலும், கனத்திலும், வரத்தைத் தவிர, மற்றெல்லா விஷயத்திலும் அவர்கள் ஒருவருக்கொருவர் சரிசமானம் உள்ளவர்களாகவே இருந்தார்கள் என்று அறியுங்கள்.

காரியம் இப்படி இருக்க, பிரியமான ரோமான் மார்க்கத்தாரே, நீங்கள் பிரயோஜனம் இல்லாத காரியத்தில் தலையிட்டுக் கொண்டு, வாது பண்ணவேண்டாம். கிறிஸ்துவே பரலோகத்தின் திறவுகோலை உடையவராய் இருக்கிறார் என்று சொல்லப்பட்டு இருப்பதைக் கவனியுங்கள். (வெளி. 3:7) இவருக்கு மேலாக, இராயப்பரையாவது பாப்புவையாவது வையாதிருங்கள். இயேசு கிறிஸ்து நாதரே திருச்சபைக்குத் தலைவர் என்றும், அவரே திருச்சபைக்கு மேலாக சகல அதிகாரத்தையும் உடையவராய் இருக்கிறார் என்றும், நாங்கள் சத்தியத்தைச் சொல்லும் போது நீங்கள் எங்களைச் சத்துருவாக எண்ணாதிருங்கள்.

தேவ மாதா

இயேசுக்கிறிஸ்து நாதருக்குச் சரீரத்தின்படி தாயாகிய மரியம்மாளுக்கு, ரோமான் மார்க்கத்தார் சர்வேஸ்பரனுடைய மாதா என்றும் பரலோகத்தின் வாசல் என்றும், பாவிகளுக்கு அடைக்கலம் என்றும், சம்மனசுக்கள், பூர்வ சபை பிதாக்கள், தீர்க்கதரிசிகள், அப்போஸ்தலர்கள், வேதசாட்சிகள், கன்னியாஸ்திரீகள், அர்ச்சியசிஷ்டர்கள் என்பவர்களுக்கும், பரலோகத்திற்கும் பூலோகத்திற்கும் இராக்கினி என்றும், மூவுலக நாயகி என்றும், ஆண்டவள் என்றும், இப்படியாகப் பற்பல பெயர்களை இட்டிருப்பதும் அல்லாமல், நிர்ப்பாக்கியமான என் ஆத்துமத்தின்மேல் இரக்கமாய் இரும் என்றும், என் பாவங்களின் கட்டுகளை அவிழ்த்தருளும் என்றும், என் துர்க்குணங்களை அடக்கியருளும் என்றும், என்னை முழுவதும் உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன் என்றும், இவ்விதமாக அந்த அம்மாளை வணங்கியும் வருகிறார்கள். இவ்விதமான பேர்களை அந்த அம்மாளுக்கு இடுவதும், பாவங்களை மன்னிக்கும்

படியாக அந்த அம்மாளை நோக்கி ஜெபம் பண்ணி வருவதும், சர்வேஸ்பரனுடைய சித்தத்திற்கும், அவர் அருளிய வேதத்துக்கும் முற்றும் விரோதமாய் இருக்கிறது. மரியம்மாளுக்கு வணக்கம் செலுத்தப்பட வேண்டும் என்று சர்வேஸ்பரனுக்குச் சித்தமாயிருந்தால், அதைப் பற்றிக் கொஞ்சமாவது சொல்லியிருக்கவேண்டும். அப்போஸ்தலரால் எழுதப்பட்ட நிருபங்களிலாவது, ஜெபங்களிலாவது, வாழ்த்துதல்களிலாவது சொல்லப்பட்டிருக்க வேண்டும். அப்படிக்கு யாதொரு வார்த்தையும் இல்லை. பெந்தேகொஸ்து என்னும் நாட்களுக்குப் பின் அப்போஸ்தலரால் எழுதப்பட்ட எந்த நடபடிகளிலும் மரியம்மாள் என்ற பெயர் முதலாய்க் காணேம். ஆரம்பத்தில் ரோமான் சபை தானும் மரியம்மாளை வணங்கவில்லை. கன்னிமரியாள் வணக்கம் கி. பி 470-ம் வருஷம் ஆரம்பித்ததேயன்றி அதற்கு முன் இல்லை. அப்படி இருக்க ரோமான் மார்க்கத்தாரே, நீங்கள் கிறிஸ்துவையும், அப்போஸ்தலரையும், பூர்வீகத் திருச்சபையையும் பார்க்கிலும் நீங்கள் மரியம்மாளைக் குறித்து அதிகமாய் மேன்மை பாராட்ட வேண்டியது என்ன!

மரியம்மாள் உயிரோடே இருக்கும்போது நாம் கனம் செலுத்தத்தான் வேண்டும். அந்த அம்மாள் செத்துப் போன பிறகும், மற்ற விசுவாசிகளைப் போலும் அவர்களுக்கு அதிகமாகவும் கனத்திற்குரியவள்தான்; ஆனால், அந்த அம்மாளுக்கு தேவனைப் போலும், தேவனைப் பார்க்கிலும் கனம் செலுத்தி ரூபஞ்செய்து, புஷ்ப மாலையிட்டு, சாம்பிராணி தூபங்காட்டி, ஜெபம் பண்ணி வருவது எவ்வளவோ மதியீனமாய் இருக்கிறதென்று நீங்களே பாருங்கள்.

ஆறும் நாற்றுண்டில் அவளுக்கு மெழுகுதிரி ஏற்றத் துவக்கினார்கள். அப்புறம் 4-ம் செக்ஸ்ற்று (Sextus IV) என்ற பாப்பு அவளுக்கு ஜெபமாலைகள் மந்திரங்கள் ஏற்படுத்தி, அவள் ஜென்மப் பாவம் இல்லாதவள் (Immaculate Conception) என்ற கோட்பாட்டையும் ஸ்தாபித்து, சங்கித ஆகமத்தில் "யெகோவா" என்கிற

திருநாமம் வருகிற இடங்களில் எல்லாம் அவள் பெயரை நாட்டினார். அது முதல் பாப்பு மார்க்கத்தார் கன்னிமரியே பெரியவள் என்று சொல்லி, அவள் திரிலோக ராக்கினியாய் இருக்கிறாள் என்பதற்கு அடையாளமாக அவள் சுரூபத்துக்கு மும்முடி தரிப்பித்து, தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் செலுத்துகிற பக்தி வணக்கங்களைப் பார்க்கிலும் நூறத்தனையான உபாசனையோடு அவளைவழிபடுகிறார்கள்.

பூர்வ ரோமர் கிரேக்கருடைய இதிகாசங்களிலும், இந்துக்களுடைய புராணங்களிலும் கற்பிக்கப்பட்டிருக்கிற ஏராளமான பொய்த் தேவர்களுக்குள்ளே ஆண் தேவதைகளும் பெண் தேவதைகளும் இருக்கிறது போல ரோமானித்தாரும் தங்களுக்கு வேண்டும் என்றே கன்னிமரியாளையும் உத்தமிகளான வேறுபல ஸ்திரீகளையும் அர்ச்சியசிஷ்டர்களாகப் பாவித்து, மெய்த் தேவனுக்குரிய ஜெபதோத்திரங்களை அவர்களுக்குச் செலுத்தி வருகிறார்கள். மரியம்மாளை சர்வேஸ்பரனுடைய மாதா என்று சொல்வது மகா மதியீனமாய் இருக்கிறது. எப்படி என்றால், சர்வேஸ்பரனுக்கு ஆதியும் இல்லை, அந்தமும் இல்லை என்று வேதம் சொல்லுகிறது. ஆனால் சர்வேஸ்பரன் என்பது இயேசுநாதரைக் குறிக்கிறது என்றால், அந்த அம்மாள் அவருக்கு மனித தன்மையின்படி தாயே அல்லாமல் ~~தேவ தன்மையின்படி தாயே அல்லாமல்~~ தேவ தன்மையின்படி தாய் அல்ல. ஒரு கலெக்டர் துரை ஒரு குதிரைமேல் ஏறிக்கொண்டு வந்தால், அந்தக் குதிரை அந்தத் துரை ஆகுமா? மேலும் இஷ்டாக்கியார் நாடகத்தில் ஒரு மான் சிரசில் இயேசுநாதர் காணப்பட்டதாகச் சொல்லுகிறீர்களே; அந்த இஷ்டாக்கியார் அந்த இயேசுநாதரை மாத்திரம் வணங்கினாரா, மானையும் சேர்த்து வணங்கினாரா? கிறிஸ்துநாதருக்கு நீங்கள் 33 மணி ஜெபமும், மரியம்மாளுக்கு 153 மணி ஜெபமும் செய்து வருவது சரியா? உங்கள் இஷ்டாக்கியார் மானைப்பார்த்து அதிகமாய் வேண்டிக்கொண்டாரோ, இயேசுநாதரைப் பார்த்து அதிகமாய் வேண்டிக்கொண்டாரோ? மரியம்மாளைப் பரலோகத்தின் வாசல் என்று நீங்கள் சொன்னால், இயேசுநாதர்: "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாய் இருக்கிறேன்" என்று சொன்ன

சத்தியத்துக்கு விரோதம் இல்லையா? மரியம்மாளைப் பாவிகளின் அடைக்கலம் என்று சொன்னால், பாவிகளுக்காகப் பாடுபட்டு இரத்தம் சிந்தி இரட்சிப்பை உண்டு பண்ணினது இயேசுநாதரோ, மரியம்மாளோ? மரியம்மாளை ஜென்மப் பாவம் இல்லாதவள் என்று நீங்கள் தீர்த்தால், அவள் தாயாகிய அன்னாளும் பாவம் இல்லாதவளாய் இருக்கவேண்டுமே! அப்படியே நெடுகப் போகையில், நம்முடைய ஆதித் தாயாகிய ஏவாளும் பாவம் இல்லாதவளாய் இருக்கவேண்டும். ஆனால் ஏவாள் பாவம் செய்ததினால் அவள் ஏதேன் தோட்டத்தை விட்டுத் துரத்தப்பட்டாள் என்றும், பாவம் இல்லாதவர்கள் பூலோகத்தில் இல்லை என்றும் வேதம் சொல்லவில்லையா? ஆனால் தேவதூதன் மரியம்மாளிடத்தில் பிரவேசித்து: "கிருபைபெற்றவளே. வாழ்க கர்த்தர் உன்னுடனே இருக்கிறார்; ஸ்திரீகளுக்குள்ளே நீ ஆசீர்வதிக்கப்பட்டவள்" என்று லூக். 1: 28-ல் சொல்லி இருக்கிற வாக்கியத்தைக்கொண்டு மரியம்மாளை நாம் வணங்குவது தகுதி என்று ரோமான் மார்க்கத்தார் சொல்லுவார்கள். தேவ தூதன் இப்படி வாழ்த்தினதினால் மரியாளை அவன் கும்பிட்டானா? ஒரு தேவதூதன் தானியேலைப் பார்த்தும் அப்படியே வாழ்த்தியிருக்கிறான். (தானி. 9: 23; 10: 11-19.) பின்னை தானியேலை அந்தத் தூதன் வணங்கினானா? ஸ்திரீகளுக்குள்ளே நீ ஆசீர்வதிக்கப்பட்டவள் என்று மரியாளை நோக்கிச் சொல்லப்பட்டிருப்பது போலவே, யாகேலை நோக்கியும் சொல்லப்பட்டிருக்கிறது. (நியா 5: 24.) ஆகையால் யாகேலை வணங்குவது நியாயமா? ஐசுவரியவானைத் தவிர, இறந்துபோன பரிசுத்தவான்களைப் பூர்வீகத்தில் இருந்த ஜனங்கள் வேண்டுதல் செய்ததாகப் பழைய ஏற்பாட்டிலாவது புதிய ஏற்பாட்டிலாவது யாதொரு வார்த்தையும் சொல்லப்படவில்லை அப்போஸ்தலர்கள் மரியம்மாளை நோக்கி ஒரு சின்ன ஜெபமாவது பண்ணியிருக்கிறார்கள் என்றாவது, ஜெபம் பண்ணும்படியாகப் போதித்திருக்கிறார்கள் என்றாவது ரோமான மார்க்கத்தார் ஒரு சின்ன வாக்கியத்தைக் கொண்டு ஒப்பித்தால், நாங்களும் மரியம்மாளை நோக்கி ஜெபம் பண்ணுவோம். அப்படிக்கு ஒப்பிக்க உங்களால் கூடாவிட்டால் நீங்கள் உங்கள் தப்பான வழியை விட்டுத்

திரும்புங்கள். உங்கள் பூரண விசுவாசத்தை இயேசுநாதர் பேரில் மாத்திரம் வையுங்கள்; அப்போது தேவன் கிருபையாக உங்களை இரட்சிப்பார்.

சொரூப வணக்கம்

சொரூபங்களை வணங்கும் வழக்கம் 300 வருஷகாலமாய்த் திருச்சபையிலே இல்லை. 713-ம் வருஷம் கோவில்களில் சொரூபங்களை வைத்ததின் நிமித்தம், முதலாம் கொன்ஸ்தந்தீன் என்னும் பாப்பு பிலிப்பென்னும் கிரேக்கை ராஜாவை அதிகாரத்தில் இருந்து தாழ்த்தி, அவனுடைய இரண்டு கண்களையும் பிடுங்கிப் போட்டார். இந்த குற்றத்திற்காகவே, மூன்ரும் கிரகோரி பாப்பு நாலாம் இலேயோவ் என்னும் ராஜாவை சபையை விட்டுத் தள்ளினர். 754-ம் வருஷத்தில் கன்ஸ்டாண்டிநோப்புள் என்னும் பட்டணத்தில் 338 ரோமான் மார்க்க பிஷோப்புக்கள் கூடி சொரூப வணக்கத்தைப் பலமாய் ஆட்சேபித்து, இயேசுவின் சொரூபத்தை கோவில்களில் இருந்து எடுத்துப்போடும்படியாக வற்புறுத்திப் பேசித் தீர்த்தார்கள். ஆனல் அதற்குப் பிறகு 787 ம் வருஷத்தில் ஐரேனி என்னும் இராணியினுடைய ஏவுதலினல், நீசேயா பட்டணத்தில் கூடிய 350 பிஷோப்புகளினல் சொரூப வணக்கம் ஸ்திரமாய் ஸ்தாபிக்கப்பட்டது. இந்த ஐரேனி என்பவள் மகா கெட்ட ஸ்திரீ. அவள் தன் கணவனுகிய இராயனை நஞ்சிட்டுக் கொன்றதும் அல்லாமல், தன் ஓரே மகனுகிய கொன்ஸ்தந்தீனுடைய கண்களையும் பிடுங்கின மகா பாதகி. 794-ம் வருஷத்தில் 300 ரோமான் மார்க்கப் பிஷோப்புக்கள் பிராங்போட் என்னும் பட்டணத்தில் பின்னும் கூடி சொரூப ஆராதனையை முற்றும் அரோசித்து விலக்கினர்கள். கிரகோரி பாப்புவும் சொரூப ஆராதனை தகாதென்று போதித்தார். இவ்விதமாக அநேக வருஷ காலமாய் ரோமான் மார்க்க பிஷோப்புக்கள் கூடி தர்க்கித்து, விரோதிக்கப்பட்டிருந்த இந்த சொரூப ஆராதனை கடைசியாக 1545-ம் வருஷத்தில் திரென்று என்னும் பட்டணத்தில் கூடின சங்கத்தால் உறுதிபடுத்தப்பட்டு, இந்நாள் வரையிலும் நடந்தேறி வருகிறது.

ரோமான் மார்க்கத்தாரே, இது சரியா? சகல உலகங்களையும் உண்டு பண்ணின தேவன் கொடுத்த இரண்டாம் கற்பனையைக் கேளுங்கள். ''மேலே வானத்திலும் கீழே பூமியிலும் பூமியின் கீழ்த் தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒரு சொரூபத்தையாகிலும் யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம்; நீ அவைகளை நமஸ்கரிக்கவும் சேவிக்கவும் வேண்டாம்'' என்பதே. [யாத். 20:4,5.] ரோமான் மார்க்கத்தார், தங்கள் குறிப்பிடங்களிலே எல்லாக் கற்பனைகளையும் எழுதி இந்த ஒன்றை மாத்திரம் விலக்கி இருக்கிறார்கள். பத்துக் கட்டளைகளில் ஒன்றை விலக்கிப் போட்டால் ஒன்பது கட்டளைகள் ஆகிறது. பத்தாம் கட்டளையை இரண்டாகப் பிரித்து, ஒன்பதைப் பத்தாக நிரவியிருக்கிறார்கள். இது சரியா? தேவ வசனத்தைக் கேளுங்கள்: ''நான் உங்களுக்கு கற்பிக்கும் உங்கள் தேவனாகிய கர்த்தரின் கட்டளைகளை நீங்கள் கைக்கொள்ளும்படி, நான் உங்களுக்குக் கற்பிக்கிற வசனத்தோடே நீங்கள் ஒன்றும் கூட்டவும் வேண்டாம், அதில் ஒன்றும் குறைக்கவும் வேண்டாம்'' என்று எழுதியிருக்கிறது. (உபாகமம் 4 :2) இப்படி கூட்டுகிறவர்களுக்கும் குறைக்கிறவர்களுக்கும் தேவனுடைய சாபமும் கூறப்பட்டிருக்கிறது (வெளி. 22: 19.) ஆனால் ரோமான் மார்க்கத்தார், ஒருவேளை தேவன் கொடுத்த முதலாம் கற்பனைக்கு இந்த இரண்டாம் கற்பனை அவர் பண்ணின வியாக்கியானம் என்று சொல்லுவார்கள். அப்படியானால் தேவனே பண்ணியிருக்கிற வியாக்கியானத்தையாவது நீங்கள் ஒப்புக்கொள்ள வேண்டாமா?

மேலும், இந்த இரண்டாம் கற்பனை வேதத்திலேயே இல்லை என்று ரோமான் மார்க்கத்தார் ஒருவேளை சொல்ல வருவார்கள். அப்படியானால் ரோமான் மார்க்கத்தார் வைத்திருக்கிற வேதத்துக்கும், புரோட்டெஸ்டாண்டு மார்க்கத்தார் வைத்திருக்கிற வேதத்துக்கும் ஆதாரமும் முந்தி உள்ளதுமாகிய யூதர் வைத்திருக்கிற வேதப் பிரதியையாவது, நீங்கள் வைத்திருக்கிற லத்தீன் வல்கேற்று என்னும் புத்தகத்தையாவது பார்வையிடுங்கள். பூர்வீகத்

தில் கேருபீன்கள் செய்து வைக்கப்படவில்லையா? என்பீர்கள். அந்த கேருபீன்கள் தேவ கட்டளையினால் செய்யப்பட்டன. ஒருவரும் பார்க்கக் கூடாத மகா பரிசுத்த ஸ்தலத்தில் வைக்கப்பட்டன. பிரதான ஆசாரியன் மாத்திரம் வருஷத்தில் ஒரு முறை அதற்குள் பிரவேசித்தான். பூர்வீக ஜனங்கள் அவைகளை வணங்கினதாகவும் வணங்க வேண்டும் என்று சொல்லப்படவும் இல்லை. பூர்வீக தேவாலயத்தில் சில விசேஷித்த பொருள்கள் தேவ உத்தரவினால் வைக்கப்பட்டதுபோலவே, இந்த கேருபீன்களும் வைக்கப்பட்டிருந்தன. அப்படியாவது, உங்கள் கோவில்களில் இப்போது கேருபீன்கள் வைக்கப்பட்டிருக்கிறதோ? இறந்து போன மனிதர்களை வைத்திருக்கிறீர்களோ? யோசித்துப் பாருங்கள். மேலும் வெண்கல சர்ப்பத்தைக் குறித்துச் சொல்ல வருவீர்கள். ஆனால் வெண்கல சர்ப்பத்துக்கு இஸ்ரவேல் ஜனங்கள் எப்போது கனத்தைச் செலுத்த ஆரம்பித்தார்களோ, அப்போதே அதை எசேக்கியா ராஜன் உடைத்து எரிந்து போட்டதாக வேதம் சொல்லுகிறது. (2 இராஜாக்கள் 18: 4.)

மேலும் பெரியோருக்குக் கனம் செலுத்தும்படியாக வேதம் சொல்லுகிறது. பக்திமான்கள் செத்துப்போனாலும் வணக்கத்துக்கும் கனத்துக்கும் உரியவர்கள்தாமே என்று வேறொரு புகலான நியாயம் சொல்வீர்கள். அப்படியானால் அவர்களுக்குப் பதிலாகச் சொரூபங்கள் செய்யும்படியாக எங்கே சொல்லியிருக்கிறது? அப்படி நீங்கள் சொரூபங்கள் செய்தாலும், ஆதாம் முதல் நாளது வரையில் உள்ள சகல பக்திமான்களுடைய சொரூபங்களை எல்லாம் செய்வித்து அவைகளைக் கோவில்களில் அடைத்துக் கனம் செய்து வணங்கி வருகிறீர்களா? செத்துப்போன பக்திமான்கள் எல்லாரும் கனத்துக்கும் வணக்கத்துக்கும் உரியவர்கள் என்று நீங்கள் சொல்லுவது போலவே, அஞ்ஞானிகளும், தேவன் ஒருவர்தான், மற்றவர்கள் எல்லாரும் அவருடைய உத்தம அடியார்கள்; ஆகையால் அவர்களை நாங்கள் வணங்கிக் கனம் செலுத்துகிறோம் என்று சொல்லுகிறார்கள். ஆ! ரோமான் மார்க்கத்தாரே, இந்த நியாயத்தில் நீங்கள் அஞ்ஞானிகளுடன் இணங்கி மதி

மயங்க வேண்டாம். சாத்தான் உலகத்தைக் கற்சிலைகளி னால் நிரப்பினதுபோல நீங்கள் மரச்சிலைகளினால் நிரப்பிக் கெடுக்கவேண்டாம். அர்ச்சியசிஷ்டர்கள் உயிரோடு இருக்கும்போது தங்களை வணங்கி கனம் செலுத்தின மனிதர்களைக் கண்டித்திருக்கிறார்கள். (அப். 14:15) அப்படிச் செய்யவேண்டாம் என்று தேவ தூதர்களும் கண்டித்திருக்கிறார்கள். (வெளி 22:8, 9.) இதை வாசித் துப்பார்த்து உங்கள் தப்பான கொள்கையை விட்டு விடுங் கள். தேவனுடைய கட்டளையைப் பார்க்கிலும் உங்கள் பாப்புக் கட்டளைகள் பெரிதோ? சர்வேஸ்பரனுடைய சித்தப்படி நடந்த உத்தமர்களை நாம் கனமாய் எண்ண வேண்டியதுதான்; ஆனால் அவர்களுக்குப் பிரதியாக நாம் சொரூபங்கள் உண்டுபண்ணி வணங்குவது வேதத் துக்கு விரோதம். புரோட்டெஸ்டாண்டர் தங்களுக்குப் பிரீதியான பேர்களுடைய ரூபங்களை எடுத்துவைப்பது நிசம்தான்; ஆனால் அவர்கள் ஞாபகத்துக்கே அல்லாது, கனத்துக்கும் வணக்கத்துக்கும் அல்ல என்று அறியுங்கள்.

சொரூபங்களைப்பற்றி ரோமான் மார்க்கத்தாருடன் பின்னும் நெருங்கிப் பேசும்போது, அவைகளை நாங்கள் வணங்கவும் இல்லை, அவைகளுக்கு கனஞ்செலுத்துகிற தும் இல்லை. ஆனால் அடையாளத்துக்கு மாத்திரம் வைத்திருக்கிறோம் என்று சொல்லுவார்கள். இப்படிச் சொன்னால் ரோமான் மார்க்கத்தார் நீசேயா பட்டணத் தில் 1564-ம் வருஷத்தில் புதிதாய்ப் பண்ணின பன்னி ரண்டு பிரமாணங்களில் இது ஒன்பதாம் பிரமாணத்துக்கு விரோதம்; அதிலே இயேசுநாதருடைய சொரூபத்தையும் நித்திய கன்னியாகிய தேவமாதாவின் சொரூபத்தையும் சகல அர்ச்சியசிஷ்டர்களின் சொரூபங்களையும் கோவில் களில் வைக்கவேணும் என்றும், அவைகளுக்குத் தகுந்த வணக்கமும் கனமும் செலுத்தவேணும் என்றும் கண்டிக் கிறது என்ன? ரோமான் மார்க்கத்தாரே, உங்கள் பிர மாணம் ஒன்று சொல்ல, நீங்கள் வேறொன்று சொல்ல லாமா? படிக்கிறது வேதம், அறுக்கிறது தாலியா? பிதாவாகிய சர்வேஸ்பரன் சொரூப வணக்கம் ஆகா தென்று பிரமாணம் கொடுத்திருக்க, நீங்கள் சொரூப

வணக்கம் செய்யவேணும் என்று எதிர்ப் பிரமாணம் செய்திருக்கிறீர்கள். இது சரியா? மேலும், சொரூபங்கள் மூலமாகச் சகல அர்ச்சியசிஷ்டர்களையும் நோக்கி ஜெபம் செய்து வருகிறீர்கள். செத்துப் போய்ப் பரலோகத்தில் இருக்கிற அவர்கள் பூலோகத்தில் இருக்கிற உங்களுடைய வேண்டுதலைக் கேட்கவும் உங்கள் நினைவுகளை அறியவும் தக்க சர்வ வியாபகமும் சர்வ ஞானமும் அவர்களுக்கு உண்டா?

அப்படி இருந்தால், அர்ச்சியசிஷ்ட மரியம்மாள் பஸ்கா பண்டிகையில் இயேசுநாதரைக் காணமல் மூன்று நாள் வரையில் அவரைத் தேடித் திரியவேண்டியது என்ன? இதைக் குறித்து லூக்கா இரண்டாம் அதிகாரம் நாற்பத்திமூன்று முதல் நாற்பத்தாரும் வசனம் வரையில் வாசித்துப்பார்த்துத் தெளிவடையுங்கள்.

தவருமை

பாப்பு சொல்லிலும், கிரியையிலும் தவருதவர் என்று ரோமான் மார்க்கத்தார் சொல்லுகிருர்கள். சிலர் இந்த தவருமை பாப்புவின் இடத்தில் மாத்திரம் இருக்கிறது என்றும், வேறு சிலர் அது பொதுவான சங்கத்தில் இருக்கிறது என்றும், மற்றும் சிலர் அது உலகம் எங்கும் உள்ள சாதாரண திருச்சபையில் இருக்கிறது என்றும், இப்படியாக ரோமான் மதஸ்தர் ஒருவருக்கொருவர் மாறுபாடாய்ச் சொல்லி, இந்த விஷயத்தில் இதுவரையில் ஒரு முடிவான தீர்ப்புக்கு வராமல் இருக்கிருர்கள். தவருமை பாப்புக்களுக்கு அர்ச்சியசிஷ்ட இராயப்பர் மூலமாக வந்தது என்று சொல்லுவார்கள். அப்படியானல் இராயப்பர் இருந்தது கி. பி. 67-ம் வருஷம். பாப்புக்கள் உண்டானது கி. பி. 606-ம் வருஷம். இந்த இடையில் உள்ள 539 வருஷ காலமாய் அந்தத் தவருமை யாரிடத்தில் இருந்தது? நல்லது நீங்கள் சொல்லுகிறபடி அது இராயப்பரிடத்தில் இருந்ததென்று வைத்துக் கொண்டாலும், இரா

யப்பர் தவறவில்லையா? கிறிஸ்துவானவர் இராயப்பரைப் பார்த்து சந்தேகப்பட்டவர் என்றும், "அற்பவிசுவாசி" என்றும் (மத். 14:31.) "விலகிப்போ சாத்தானே" என்றும் (மத். 16·23.) சொல்லவில்லையா? இராயப்பர் குற்றவாளி என்று சின்னப்பர் கண்டு முகமுகமாய் அவரைக் கண்டிக்கவில்லையா? (கலா. 2:11.) இப்படி இருக்க ரோமான் மார்க்கத்தாரே, உங்கள் தவறுமைக்கு ஆதாரம் எங்கே? அது சபையிலும் இல்லை; சங்கத்திலும் இல்லை, பாப்புவிலும் இல்லை; இராயப்பரிலும் இல்லை. தவறுமை சர்வேஸ்பரனில் மாத்திரம் உண்டென்று அறியுங்கள்.

1869-ம் வருஷம் டிசம்பர் மீ 8வ உலகத்தில் எங்கும் உள்ள ரோமான் மார்க்கு சபை விசாரணைத் தலைவர்கள் ஆகிய அத்தியக்ஷர்களில் அறுநூறு பேர் வரையில் ரோமாபுரியில்கூடிவந்து பேசினதில் அவர்களில் நானூற்று ஐம்பதுபேர் எழுந்து அர்ச்சியசிஷ்ட பாப்புவானவர் லௌகீக உத்தியோக விஷயமாய்ச் சொல்லும் சொல்லெல்லாம் எவரும் அங்கிகரிக்க வேண்டிய தவறுமொழி என்றும், வைதீக உத்தியோக விஷயமாய் அவர் உணர்த்தும் உபதேசம் எல்லாம் திவ்விய உபதேசம் என்றும், அவர் பண்ணும் தீர்ப்பு எல்லாம் தேவ தீர்ப்பு என்றும், பொருளுள்ள தவறுமை பாப்புவுக்கு உண்டென்று நிலை நிறுத்தினார்கள். பாவியான ஸ்திரீயினிடத்தில் பிறந்த ஒரு மனுஷன் தன்னை ஆறு லட்சணம் உள்ள கடவுள் என்று பாவித்து திருச்சபையின் பேரில் இவ்வித அதிகாரம் செலுத்தத் துணிந்திருப்பது எவ்விதத்திலும் தகாதென்று அநேக ரோமாவித்தார் அவரை விரோதித்ததும் அல்லாமல், ஔஸ்திரிய துரைத்தனத்தாரும் தாங்கள் 1865-ம் வருஷம் அவருடன் பண்ணியிருந்த உடன்படிக்கையும் தள்ளிவிட்டார்கள். சர்வேஸ்பரன் தமது ராஜ்யம் இவ்வுலகத்தின் தன்மையுள்ளதல்ல என்று, திருவுளம்பற்றி இருப்பதை ரோமான் மார்க்கத்தாரே, நீங்கள் யோசிக்க வேண்டாமா?

சந்நியாச மடங்கள்

ரோமான் மார்க்கத்தார் பக்தி வளர்ச்சிக்காகச் சந்நியாச மடங்களையும் கன்னியாஸ்திரீ மடங்களையும் ஸ்தாபித்து இருக்கிறதாகச் சொல்லுகிறார்கள். இந்த ஏற்பாட்டைக் குறித்துப் பழைய ஏற்பாட்டிலேயாவது புதிய ஏற்பாட்டிலேயாவது ஒரு வார்த்தையும் சொல்லப்படவில்லை. இது கிறிஸ்துவுக்குப் பிறகு 328-ம் வருஷத்தில் முதல் முதல் அர்ச்சியசிஷ்ட அந்தோணி என்பவரால் நியமிக்கப்பட்டது. பாவத்தோடு பிறந்து பசாசின் வலைக்கு உட்பட்டிருக்கிற ஜனங்களில் சில ஆண்களையும் பெண்களையும் தெரிந்து அவர்களை மடங்களுக்குள்போட்டு அடைத்து வளர்ப்பதினால் அவர்கள் பாவ இச்சை அவர்களை விட்டுப் போகுமா? குற்றஞ் செய்த குற்றவாளிகளுக்கு விலங்கிட்டு காப்பதினால், அவர்கள் துர்ச் செய்கைக்கு ஒரு வேளை தடை உண்டாகுமே தவிர, அவர்கள் துர்க்குணத்துக்குத் தடை ஆகுமா? மனதில் எண்ணுகிறபாவத்துக்கு தேவன் தண்டிக்கமாட்டாரா என்ன? ரோமான் மார்க்கத்தாரே, நீங்கள் இன்னொரு சகாயஞ்செய்யுங்களேன்.

இந்த பூலோகத்தில் இருக்கும் சகல ஜனங்களுக்கும், சந்நியாசி மடங்களைக் கட்டிப் போட்டு அவர்களை அவைகளில் அடைத்துப் பாவத்துக்கு விலக்குங்களேன். அப்படிச் செய்தால் ஒரு தலைமுறைக்குள் பூலோகத்தில் ஒரு மனுப்பூடு இல்லாதபடி செய்வீர்கள் என்பதற்குச் சந்தேகம் இல்லை. பூர்வத்தில் இருந்த பக்திமான்களில் சிலர் மடங்கள் இல்லாமல் பரலோகத்துக்குத் தேகத்தோடு ஏகவில்லையா? கட்டாயத்தின் பேரிலும் கட்டுப்பாட்டின் பேரிலும் தேவனுக்கு உத்தமமாய்ப் பிரயாசப்படுவதைப் பார்க்கிலும், எவ்விடத்தில் இருந்தும் மனதார பாவத்தை வெறுத்து, தேவனுக்குப் பிரீதியாய் நடப்பதே உத்தமம். சந்நியாச மடங்களால் பிரயோஜனம் இல்லை என்று பின் வரும் வாக்கியத்தால் தெரிய வருகிறது (மத். 5: 15, 16) "விளக்கைக் கொளுத்தி மரக்காலால் மூடி வைக்காமல், விளக்குத் தண்டின் மேல் வைப்பார்கள். அப்பொழுது அது வீட்டில் உள்ள யாவர்க்கும் வெளிச்சம் கொடுக்கும்."

“[illegible]”

இந்த வசனங்களைக் கவனித்துத் தெளிவடையுங்கள்.

உத்தரிக்கும் ஸ்தலம்

உத்தரிக்கும் ஸ்தலத்தைக் குறித்து ரோமான்களுடைய கொள்கை: மனிதன் செய்யும் பாவத்திற்காக நித்திய ஆக்கினையையும் அநித்திய ஆக்கினைகளையும் அடையவேண்டும் என்றும், இயேசுநாதர் தம்முடைய மரணத்தினாலே நித்திய ஆக்கினைகளை நிவர்த்தி செய்தாலும், அவனவன் தான் செய்த பாவத்திற்குத் தக்க அநித்திய ஆக்கினைகளை அநுபவிக்கவேண்டும் என்றும், அந்த அநித்திய ஆக்கினைகள் இம்மையில் ஒருவன் செய்யும் தவங்களாலும் அல்லது மறுமையில் படும் துக்கங்களாலும் நிவாரணம் ஆகும் என்றும், இப்படி மறுமையில் ஆக்கினை அடையும் ஸ்தலம் உத்தரிக்கும் ஸ்தலம் என்றும், அதில் இருந்து தப்பும்படியாக இனத்தார் முதலானவர்கள் செய்யும் மந்திரங்களாலும், பரிசுத்தவான்கள் செய்யும் மன்றாட்டுகளாலும், திருச்சபையில் பொக்கிஷமாக இருக்கிற மிச்சப் புண்ணியங்களாலும் கர்த்தருடைய இராப்போஜனத்தில் செலுத்தப்படுகிற பூசை பலியினாலும் உதவி அடைகிறார்கள் என்றும் போதிக்கிறார்கள்.

கிறிஸ்தவர்களுக்கு வேதமாய் இருக்கிற பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் மனிதன் மரித்த பிறகு போய்ச் சேரவேண்டிய இடங்கள் நரகம் என்றும் மோக்ஷம் என்றும் சொல்லப்பட்ட இரண்டு இடங்கள் மாத்திரம் உண்டு என்று சொல்லப்பட்டிருக்கிறதே அல்லாமல், இப்படிப்பட்ட ஸ்தலத்தைப் பற்றி யாதொன்றும் காணோம். உத்தரிக்கும் ஸ்தலம் என்ற பேர் முதலாய் இல்லை. அப்படி இருக்க ரோமானித்தார் இந்த உப

தேசத்தை எங்கே இருந்து கற்றுக் கொண்டார்களோ தெரியவில்லை. கிறிஸ்துவுக்குப் பிறகு, 400வருஷ காலமாய் இந்த கொள்கைத் திருச்சபையிலும் இல்லை. திருச்சபை இதைப் பற்றிக் கேள்விப்படவும் இல்லை.

இந்த உபதேசம் 593-ம் வருஷம் ஆரம்பித்து, அநேக தர்க்கங்களுக்கு இடமாய் இருந்து கடைசியில் 1563-ம் வருஷத்தில் ரோமைச் சபையின் விசுவாசப் பிரமாணமாக அங்கிகரிக்கப்பட்டது இதற்கு ஆதாரமாக ''எவனாகிலும் மனுஷ குமாரனுக்கு விரோதமாய்ப் பேசினால் அது அவனுக்கு மன்னிக்கப்படும்; எவனாகிலும் பரிசுத்த ஆவிக்கு விரோதமாய்ப் பேசினால், அது இம்மையிலும் மறுமையிலும் அவனுக்கு மன்னிக்கப் படுவதில்லை'' (மத். 12: 32) என்னும் வசனத்தைக் கொண்டு வருகிறார்கள். இயேசுவானவர் பரிசுத்த ஆவியின் வல்லமையினால் தமது தேவ தன்மையை ரூபிக்கும் பொருட்டு பற்பல அற்புதங்கள் செய்து வருவதை பரிசேயர் கண்டு அவைகளைப் பிசாசின் வல்லமையினால் செய்கிறார் என்று அவரை அலட்சியம் செய்தார்கள். ஆகையால் இயேசு நாதர் அவர்களைப் பார்த்து: உங்களில் யாராவது, என்னுடைய தாழ்மையான வருகையையும் மனுஷீகத்தையும் குறித்துப் பேசி வருகிற பாவங்கள் மன்னிக்கப்படக் கூடியவைகள். ஆனால் நான் இந்த அற்புதங்களைப் பரிசுத்த ஆவியின் வல்லபத்தால் செய்யவில்லையென்றும், எனக்குத் தெய்வீகம் இல்லை என்றும் பேசினால் அப்பேர்ப்பட்டவர்களுடைய பாவங்கள் ஒருககாலும் மன்னிக்கப்பட மாட்டாது என்பதே இதின் அர்த்தம். இயேசுநாதர் மெய்யான தேவன் என்று விசுவாசிக்கும் பேர்களுடைய பாவங்கள்தான மன்னிக்கப்படும். ஆகையால் நாம் இந்த அர்த்தத்தைக் கொள்வதற்குத் தகுந்த நியாயம் இருக்கிறது. இதைப் பற்றி முன் பின் வசனங்களையும் பார்த்துக்கொள்ளவும்.

மேலும் இந்தக் கொள்கைக்குப் பிரதான ஆதாரமாக, ''அந்த ஆவியிலே அவர் போய் காவலில் உள்ள ஆவிகளுக்குப் பிரசங்கித்தார்'' (1 பேது. 3: 19.) என்னும் வசனத்தையும் ஸ்தாபிக்கிறார்கள். ஜலப்பிரளயம் உண்டாகு முன் இயேசு நாதர் தமது ஆவியைக் கொண்டு பிரசங்கம்

பண்ணினார் என்பதே அதின் கருத்து, இதைப் பற்றி முன் பின் வசனங்களைக் கவனிக்கவும். ரோமானித்தார் தப்பிதமாகப் பண்ணிக்கொண்ட அர்த்தப்படி பார்த்தாலும் உத்தரிக்கும் ஸ்தலத்தில் இருப்பவர்களுக்கு இயேசு நாதர் செய்தது போல பிரசங்கமல்லோ பண்ணவேண்டும்? அப்படிச் செய்யாமல் அவர்களுக்காக மோக்ஷ விளக்கு வைத்து கல்லறை மேடுகளில் பலகாரங்களைக் கொண்டு போய்ப் படைத்து பணத்திற்குத் தக்கதாகப் பூசை பண்ண வேண்டியதென்ன? ஒரு ஆத்துமா உத்தரிக்கும் ஸ்தலத்தில் இருந்து மோக்ஷம் போய்ச் சேருவதற்கு எத்தனை பூசை பண்ணவேண்டும் என்ற கணக்காவது, அந்த ஆத்துமம் எது முதல் எது வரையில் அந்த ஸ்தலத்தில் இருக்கிறது என்றாவது, உங்களுக்காவது உங்கள் குருமாருக்காவது தெரியுமா? பணங்கொடுக்கிறவனுடைய ஆத்துமா மாத்திரம் பூசையினால் கரை ஏறினால், பணங்கொடுக்க அவகாசம் இல்லாதவனுடைய ஆத்துமாவுக்கு வழி என்ன?

ஒரு எளிய மனுஷன் கடன்பட்டுத் தன் கையில் இயன்றதை உத்தரிக்கும் ஸ்தலத்தில் இருக்கிற தன் தகப்பனைக் கரையேற்றும்படியாக ஒரு வருஷத்தில் கொடுக்க, அதை வாங்கிக்கொண்டு குருவானவரும் பூசைபோட, அவன் தகப்பன் மோக்ஷம்போய்ச் சேர்ந்தான் என்று வைத்துக் கொள்ளுங்கள்; அடுத்த வருஷத்திலும் அந்த ஏழை மனுஷனிடத்தில் உத்தரிக்கும் ஸ்தலத்துக்காக வரி கேட்க வேண்டியது என்ன? போன வருஷத்தில் மோக்ஷம்போய்ச் சேர்ந்திருந்த அவன் தகப்பனை இந்த வருஷத்தில் மறுபடியும் உத்தரிக்கும் ஸ்தலத்துக்குத் தள்ளினது யார்? ஆனால் ஒரு மனுஷனுடைய ஆத்துமாவுக்கு நாங்கள் ஒருவனிடத்தில் அடிக்கடி வரி கேட்கிறதில்லை. உத்தரிக்கிற ஸ்தலத்திலுள்ள சகல ஆத்துமாக்களுக்காகவும் வரி வாங்குகிறோம் என்று ரோமானித்தார் ஒர்வேளை சொல்லுவார்கள். அப்படி வாங்குவதற்கும் ஆதாரம் எங்கே?

பிரியமான ரோமான் மார்க்கத்தாரே, நீங்கள் செத்துப் போனவர்களுடைய பாவத்துக்கும் பணம் வாங்கி வருவது நியாயமா? உங்கள் புத்திக்கு இது இசைவாய்க் காணப்படுகிறதா? செத்தவர்களுடைய ஆத்துமாக்கள்

உத்தரிக்கிற ஸ்தலத்துக்குப் போகிறது என்ற கொள்கை இயேசுநாதர் செலுத்தின பூரண பலிக்குக் குறைச்சல் உண்டாக்குகிறதாய் இருக்கிறது. "இயேசு கிறிஸ்துவினுடைய சரீரம் ஒரேதரம் பலியிடப்பட்டதினாலே, அந்தச் சித்தத்தின்படி நாம் பரிசுத்தமாக்கப் பட்டிருக்கிறோம்" என்றும், "பரிசுத்தமாக்கப்படுகிறவர்களை ஒரே பலியினாலே அவர் என்றென்றைக்கும் பூரணப்படுத்தியிருக்கிறார்" என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. (எபி 10: 10, 14.)

ரோமானித்தார் போதிக்கிற இந்த உபதேசத்தைக் கைக்கொள்ளுகிற எவர்களும் ஆறுதலால் மரிக்க இடம் இல்லை. ஏனென்றால் ஒருவன் என்றைக்கு இறந்தாலும், உத்தரிக்கிற ஸ்தலத்துக்கே போகவேண்டியவனாய் இருக்கிறான். மேலும் இந்த உபதேசம்: லாசரும், பச்சாதாபக் கள்ளனும், ஸ்தேவானும் மரித்த உடனே மோக்ஷம் போய்ச் சேர்ந்தார்கள் என்ற அத்தாட்சிக்கும், "நீங்கள் உங்கள் தேவனாகிய கர்த்தரின் பிள்ளைகள்; செத்தவனுக்காகக் கீறிக்கொள்ளாமலும், உங்கள் கண்களுக்கு இடையிலே சவரம் பண்ணாமலும் இருப்பீர்களாக" (உபா. 14:1.) என்றும், "நாம் தைரியமாகவே இருந்து, இந்தத் தேகத்தை விட்டுக் குடிபோகவும், கர்த்தரிடத்தில் குடியிருக்கவும் அதிகமாய் விரும்புகிறோம்" (2 கொரி 45: 8) என்றும்சொல்லப்பட்ட வேதவசனங்களுக்கும், 'ஒரே தரம் மரிப்பதும் பின்பு நியாயத் தீர்ப்படைவதும் மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது" (எபி 9: 27) என்ற தேவ நியமத்துக்கும் விரோதமாய் இருக்கிறது.

பிரியமான ரோமான் மார்க்கத்தாரே, மனிதருடைய சுய புத்திக்கும் வேதத்துக்கும் விரோதமான உபதேசத்தை நீங்கள் கைக்கொள்ளலாமா? பாவம் புண்ணியம் இரண்டு, நரகம் மோக்ஷம் இரண்டு என்று எல்லா மார்க்கத்தாரும் சத்திய வேதமும் சொல்ல, நீங்கள் மனிதன் மரித்த பிறகு, அவன் போய்ச் சேரவேண்டிய இடம் மூன்று என்று போதிக்கலாமா? பாவத்தை நீங்கள் தரம் பிரித்துப் போதிக்கலாமா? இன்னின்ன பாவத்திற்கு இன்னின்ன தண்டனை என்று இருந்தால், அதைத் தேவனிடத்தில் விட்டு விடுங்கள். ஒவ்வொருவரும் செய்த பாவத்துக்குத்

தக்க பலனைக் கொடுக்க அவர் அறிந்திருக்கிறார். "உங்கள் சுய புத்தியில் சாயாதிருங்கள்."

பாவமன்னிப்புச் சீட்டுகள்

பாவத்துக்குக் கிடைக்க வேண்டிய ஆக்கினை நித்திய ஆக்கினை என்றும், அநித்திய ஆக்கினை என்றும், இந்த அநித்திய ஆக்கினையை விலக்குவதற்கு அர்ச்சியசிஷ்ட பாப்பானவருக்கு அதிகாரம் உண்டு என்றும், அவரிடத்திலே தேவ மாதாவுடையவும் சகல அர்ச்சியசிஷ்டவான்களுடையவும் மிச்சப் புண்ணிய கிரியைகள் இயேசுநாதருடைய புண்ணியங்களோடு கலந்து பொக்கிஷ வைப்பாக இருக்கிறது என்றும், அதில் இருந்து செலவு செய்ய அவருக்கு அதிகாரம் உண்டென்றும், இந்தப் புண்ணியத்தினால் உத்தரிக்கும் ஸ்தலத்திலுள்ள ஆத்துமாக்கள் நிறைவடைந்து, மோக்ஷம் போய்ச் சேருகிறார்கள் என்றும் ரோமானித்தார் போதித்து வருகிறார்கள். மேலும் அவர்கள் பாவத்தைத் தரம் பிரித்து பணத்துக்கு விற்றும் இருக்கிறார்கள்.

இந்த நூதன உபதேசத்தை பதினாறும் நூற்றாண்டில் இருந்த பத்தாம் லியோ என்னும் பாப்பு போதித்து வந்தார். அவர் கோவில் பொக்கிஷங்களைத் தம்முடைய இஷ்டப்படி ஆராதூரியாய்ச் செலவிட்டு வந்ததினால் பணம் சேர்க்கும்படி இவ்விதச் சீட்டுகளை விற்பனைசெய்யக் கற்பித்தார். இந்த சீட்டுகளில் அர்ச்சியசிஷ்ட பாப்பானவர் எப்படிப்பட்ட பாவங்களையும் மன்னித்து நித்திய தண்டனையை விலக்கி விட்டு மோக்ஷாநந்தத்தைக் கொடுக்க அதிகாரி என்றும், இந்த அதிகாரம், பிதா சுதன் இஸ்பிரித்துசாந்துவாகிய திரியேக சர்வேஸ்பரனால் அவருக்கு அளிக்கப்பட்டது என்றும், ஒருவன் முன் செய்த பாவங்களுக்கும் பின் செய்யப் போகிற பாவங்களுக்கும் மன்னிப்பு உண்டென்றும் கண்டிருந்ததுமல்லாமல், இன்னின்ன பாவத்துக்கு மன்னிப்புக் கிரயம் இவ்வளவு என்

றும் திட்டஞ் செய்து வெளியரங்கமாய் வெட்கமில்லாமல் விற்பனை செய்தார்கள். ஒரு கொலை சங்கதியில் ஒருவன் பொய்ச் சத்தியம் செய்திருந்தால், அந்தப் பாவம் தீரும் படி அவன் 4½ ரூபாய் கொடுத்து சீட்டு வாங்க வேண்டும். களவுக்கும் வீட்டைத் தீக்கொளுத்துவதற்கும் 6 ரூபாயும், ஒரு சபையானைக் கொலை செய்த பாவத்திற்கு 3¾ ரூபாயும், குருவைக் கொன்றதற்கு 5¼ ரூபாயும், இன்னும் சில பாவங் களுக்கு ரூபாய் 50, 60, 100, 150 கொடுக்க வேண்டும் என்றும் போதித்தார்கள்.

1709-ம் வருஷத்தில் ஒரு சண்டைக் கப்பல் சிறு தோணியைப் பிடித்தபொழுது, அதில் பாவமன்னிப்புச் சீட்டுகள் கட்டியிருந்த 500 பெரிய மூட்டைகள் இருந்தது என்றும், அவைகளை எண்ணிப் பார்த்தபோது, முப்பத் தெட்டு லட்சத்து நாற்பதினாயிரம் சீட்டுகள் இருந்தது என்றும், அவைகள் 7 அணா முதல், 110 ரூபாய் வரையி லும் விலையுள்ளவைகளாய் இருந்தன என்றும், மில்னர் என்னும் சாஸ்திரி சொல்லியிருக்கிறார். பத்தாம் லீயோ பாப்பு அனுப்பின இந்தச் சீட்டுகளை விற்பனை செய்யும்படி யாக, மேன்ஸ் பட்டணத்து சிரேஷ்ட அத்தியக்ஷராகிய அலமெட் என்பவர் அருளப்ப தெட்சல் (John Tetzel) என்பவனை ஏற்படுத்தியிருந்தார்: இவன் ஒரு தட்டானு டைய மகன், சற்று படித்த மனுஷனாயும் இருந்தான். இவன் ரோமான் மார்க்கத்தில், தோமினிக்கர் என்ற சந் நியாச வகுப்பில் சேர்ந்து, 1502-ம் வருஷம் பாவமன் னிப்புச் சீட்டு விற்கும் வியாபாரத்தில் பிரவேசித்தான். இவனுக்கு மாசம் 85 ரூபாய் சம்பளமும், சவாரிக்கு வேண் டிய சாரட்டும், குதிரையும் பிரயாணத்திற்கு வேண்டிய செலவுகளும் கொடுக்கப்பட்டது. இவன் மிகவும் கெட்ட நடக்கை உள்ளவனாயும், விபசார முதலிய துன்மார்க்கத் தில் கண்டு பிடிக்கப்பட்டு மரண தண்டனைக்கும் உட்பட்டு தப்பினவனாயும் இருந்தான். இராயன் இவனை ஒரு சாக் கில் போட்டுக் கட்டி ஆற்றில் போட்டு விடும்படி உத்தரவு கொடுத்ததை இளவரசன் கேட்டு அவனுக்காக மன்றாடி அந்தத் தீர்ப்பை மாற்றினார்.

இப்படி இருந்தாலும் அவன் வெட்கப்படாமல் தனக்கு விபசாரத்தில் பிறந்த பிள்ளைகளில் இரண்டு பேரை எப்

போதும் தன்னோடே வைத்துக் கொண்டியிருந்தான். இவன் இந்தச் சீட்டுகளை விற்பனை செய்யப் போகும்போது தான் இரட்டைக் குதிரைச் சாரட்டு மேல் ஏறிக் கொள்ளு வான். இவனுக்கு முன்னும் பின்னும் மூன்று துணையாட்கள் குதிரைகள் பேரில் ஏறிக்கொண்டு பட்டணங்கள் தோறும் போவார்கள். அவர்கள் பட்டணப் பிரவேசம் செய்வதற்கு முந்தி அவர்களில் ஒருவன் அந்த பட்டணத்திலுள்ள அதி காரிகளிடத்தில் போய், சர்வேஸ்பரனாலும் அர்ச்சியசிஷ்ட பாப்புவினாலும் அருளப்பட்ட கிருபை உங்கள் பட்டணத்து வாசலண்டையில் வந்து காத்திருக்கிறது என்பான். உடனே கோவில் மணிகள் அடிக்கப்படும்; குருமார், சந் நியாசிகள், கன்னியாஸ்திரீகள், பள்ளிக்கூடத்துப் பிள்ளை கள், குடி படைகளில் அநேகர் கைகளில் மெழுகுதிரிகள், கொடிகள் முதலானது பிடித்துக் கொண்டு பாவமன்னிப்பு சீட்டை விற்பனை செய்ய வந்திருக்கிற முதலாளிகளுக்கு எதிர் கொண்டு போய்ச் சந்தித்துப் பட்டணப் பிரவேசம் செய்வார்கள்.

இந்தச் சீட்டுகள் செல்லும் என்று சொல்லிய பாப்பு வின் கட்டளையை ஒருவன் பட்டு மெத்தையின் பேரிலாவது பொற்சரிகை மெத்தையின் பேரிலாவது வைத்து ஏந்திக் கொண்டு முந்திப்போவான். இன்னும் ஒருவன் சிவப்பு வர்ணமிட்ட சிலுவை மரத்தைக் கையில் பிடித்து அவ னுக்குப் பின்னால் செல்லுவான்; இப்படியே அவர்கள் வரிசை வரிசையாய்க் கொட்டு முழக்கத்தோடும், மேள தாள வாத்தியங்களோடும், மகா ஆரவாரத்தோடும் கோவிற்குள் பிரவேசித்து, அந்தச் சிலுவையைப் பூசை நடக்கும் இடத்துக்கு முன்னாக நிறுத்தி, பாவமன்னிப்புச் சீட்டைக் குறித்துக் கொடுத்த கட்டளையை அதின் பேரில் கட்டி அவர்கள் அந்தப் பட்டணத்தில் இருக்கும் பரியந்தம் பாப்பானவர் இருக்கும்போது எவ்வித மரியாதையோடு பூசை செய்வார்களோ அவ்விதமாகவே அப்பட்டணத்து குருக்கள்மார் அதற்குப் பூசை செய்து வருவார்கள்.

அந்தச் சீட்டை விற்பனை செய்வோன் பண்ணும் பிர சங்கத்தைப் பற்றிக் கொஞ்சம் கேளுங்கள்; சரக்குகளை விற்கும் கடைக்காரன் தன் சரக்குகளை எப்படி உயர்த்திப்

போகவாறு அப்படியே இவன் இந்தச் சீட்டுகளால் உண்டாகும் நன்மைகள் சிலாக்கியங்கள் இவை என்று வெகு சாதுரியமாய்ச் சொல்லுவான் ஜனங்கள் வெகு ஆச்சரியத்தோடு வாய் திறந்து கவனித்துக் கேட்பார்கள். சர்வேஸ்பரன் அருளிய பலவகை வரங்களில் இந்த பாவமன்னிப்புச் சீட்டுகளே அதிக அருமையும் சிறந்தவைகளுமாய் இருக்கிறதென்றும், இயேசுநாதர் மரித்த சிலுவையில் எவ்வளவு புண்ணியமோ அவ்வளவு புண்ணியம் இங்கே நிறுத்தியிருக்கிற சிலுவையிலும் உண்டென்றும், மோக்ஷலோகத்தில் இருக்கிற அர்சியசிஷ்ட இராயப்பரும் தன் உத்தியோகத்தை மாற்ற நினைத்தாலும், நான் அதற்குச் சம்மதிக்கமாட்டேன் என்றும், ஏனென்றால் அவருடைய பிரசங்கத்தினால் இரக்ஷிக்கப்பட்ட பேர்களைப் பார்க்கிலும் நான் விற்கும் சீட்டினால் இரக்ஷிப்படையும் பேர்கள் அதிகமாகும் என்றும், தேவமாதாவாகிய அர்ச்சியசிஷ்ட கன்னி மரியாளை ஒருவனும் கற்பழிக்கக் கூடாத காரியமானாலும், அப்படிப்பட்ட பாதகத்தை ஒருவன் செய்திருந்தாலும் இந்தச் சீட்டினால் மன்னிப்படைவான் என்றும், உத்தரிக்கும் ஸ்தலத்துக்குப் போகவேண்டிய சகல பாவங்களும் மன்னிப்பாகிப் போகும் என்றும், இந்தச் சீட்டுகள் உயிரோடு இருக்கிறவர்களுக்கு மாத்திரம் அல்ல, மரித்தவர்களுக்கு உதவும் என்றும் அவர்களுக்காகக் கொடுக்கிற பணம் கணீர் என்று பெட்டிக்குள் விழுகிற க்ஷணமே ஆத்துமாக்கள் உத்தரிக்கும் ஸ்தலத்தில் இருந்து விடுதலை அடைந்து மோக்ஷானந்தத்திற்குப் பறந்து செல்லுகிறதென்றும், இப்போது உலகத்தில் ஆளுகிறவர் நம்முடைய தேவனாகிய சர்வேஸ்பரன் அல்ல, அவர் சகல அதிகாரத்தையும் அர்ச்சியசிஷ்ட பாப்பானவருக்கே ஒப்புக்கொடுத்துவிட்டார், ஆகையால் அவருக்குக் கீழ்ப்படியுங்கள், அவர் சொல்லுவதை நம்புங்கள் என்றும், இந்தப் பாவமன்னிப்புச் சீட்டுகளை நான் கிரயத்துக்கு விற்று வாங்கும் பணம் அர்ச்சியசிஷ்ட இராயப்பர், அர்ச்சியசிஷ்ட சின்னப்பர் அடக்கம்பண்ணி இருக்கிற கோவில்களைச் சிறப்பாகக் கட்டி வைக்கும்படியாகவே உதவுகிறதாய் இருக்கிறதென்றும், அந்தக் கனத்தையும் சிலாக்கியத்தையும் புண்ணியத்தையும் நீங்கள் பெற்றுக் கொள்ளுங்கள் என்றும், இவைகளைப்போல பின்னும் அநேக தப்பிதமான காரியங்களைக்

கூசாமல் சொல்லி, பணப்பெட்டிக்கு நேராகக் கையை நீட்டி, ஜனங்களைப்பார்த்து: பணத்தைக் கொண்டு வாருங்கள் கொண்டுவாருங்கள், கொண்டுவாருங்கள் என்று இவ்விதமாகச் சத்தமிட்டுக் கூவிப் பிரசங்கத்தை முடிப்பாளும்.

தெட்ஸல் என்பவனைப்பற்றி ஒரு கதையும் உண்டு: அவன் ஒருவிசை லிப்சிக் பட்டணத்தில் பாவமன்னிப்புச் சீட்டுகளை அநேகமாய் விற்று பெட்டி நிறையப் பணம் வைத்துக்கொண்டு இருந்தான்; அவன் சூதை எல்லாம் அறிந்த ஒரு பிறபு அவனிடத்தில் போய், ஒருவன் இனிமேல் செய்யும் பாவத்தை மன்னிக்கும் சீட்டு ஒன்றை எனக்குக் கொடுக்கக் கூடுமா என்று கேட்க, அவன் பணங் கொடுத்தால் கொடுக்கிறேன் என்று சொல்ல உடனே அந்தப் பிரபு அவன் கேட்ட தொகையைக் கொடுத்துச் சீட்டை வாங்கிக் கொண்டு போய்விட்டான். சில நாளுக்குப்பின், தெட்ஸல் என்பவன் பணப் பெட்டியை எடுத்துக்கொண்டு பயணம் போகிறதை அந்தப் பிரபு கேள்விப்பட்டு, அந்த வழியில் ஒரு பக்கம் ஒளித்துக் கொண்டு இருந்தான்; தெட்ஸல் என்பவன் அந்த இடத்துக்கு வந்தவுடனே அவன் மேல் விழுந்து அடிதண்டமாய் அடித்து: அவனிடத்தில் இருந்த பணப் பெட்டியையும் பறித்துக் கொண்டு, நான் செய்த பெரிய பாவத்துக்கு நீ கொடுத்த இந்தச் சீட்டே பரிகாரம் என்று சொல்லி, அதை அவன் கையில் கொடுத்துப் போய்விட்டான். பாவமன்னிப்புச் சீட்டுகளினுல் இப்படிப்பட்ட விபரீதங்கள் உண்டாயிருந்தன.

பிரியமான ரோமான் மார்க்கத்தாரே, வேதத்துக்கும் மனிதருடைய சுய புத்திக்கும் விரோதமும் அருவருப்புவான இந்த ஏற்பாடு உங்கள் சபையில் இருந்தால் அது கிறிஸ்துவின் சபை ஆகுமா? இதைப் பற்றி நாங்கள் எழுதியிருப்பது ஒருவேளை பொய் என்று நினைப்பீர்கள்; அப்படியானுல் பதினுரும் நூற்ருண்டில் பத்தாம் லீயோ என்னும் பாப்பு இருந்தது நிஜந்தானு என்றும், அவரால் இந்த ஏற்பாடு உண்டானது உண்மைதானு என்றும், அருளப்ப தெட்ஸல் என்பவன் இந்த வியாபாரஞ் செய்தது மெய்தானு என்றும், உங்கள் குருமாரையாவது விசாரித்து

நிசம் அறியுங்கள். அவர் சொல்ல வெட்கப்பட்டால், 1350-ம் வருஷம் 6-ம் கிளமென்று பாப்பு. 4-ம் பையஸ் பாப்பு உண்டாக்கின விசுவாசப் பிரமாணத்தையும், 1564-ம் வருஷம் திரென்று சங்கத்துத் தீர்ப்பையும் மேற்படி சங்கம் 25-ம் கூட்டத்தில் பிறந்த தீர்ப்பையும் பார்வையிடவும்.

ஏழு தேவ திரவிய அநுமானங்கள்

ரோமான் மார்க்கத்தார் ஏழு தேவ திரவிய அநுமானங்கள் உண்டென்று போதிக்கிறார்கள். இவைகள் எப்படி வந்ததென்று அவர்களைக்கேட்டால், அது வம்ச பாரம்பரியமாய்ச் சபையில் வழங்கி வந்தது என்று சொல்லுகிறார்கள். ரோமான் மார்க்கத்தாரே, ஜனங்கள் கூட்டியும் குறைத்தும் சொல்லிவருகிற பாரம்பரியத்தை உண்மை என்று நம்புகிறதோ, பரிசுத்த ஆவியானவர் பரிசுத்த மனிதரைக்கொண்டு எழுதித் தந்த சத்திய வேதம் உண்மை என்று நம்புகிறதோ? ஏழு தேவ திரவிய அநுமானங்கள் உண்டென்றும் கொள்கை அநேக வருஷ காலமாய்த் திருச்சபையிலே இல்லை. இது சன்னம் சன்னமாய் ஆரம்பித்துக் கடைசியில், 1547-ம் வருஷம் திரென்று சங்கத்தில் ஸ்திரமாக ஸ்தாபிக்கப்பட்டது.

இயேசுக்கிறிஸ்து நாதரால் ஏற்படுத்தப்பட்டது ஞானஸ்நானம் நற்கருணை என்று சொல்லப்பட்ட திரவிய அநுமானங்கள் இரண்டுதான்: இந்த இரண்டைத்தான் கிறிஸ்தவர்கள் யாவரும் கைக்கொண்டு வரும்படியாக, வேதத்திலும் வெளிப்படையாகவும் தெளிவாகவும் சொல்லியிருக்கிறது. அப்படி இருக்க ரோமான் மார்க்கத்தார் ஏழு தேவ திரவிய அநுமானங்கள் உண்டென்று போதிப்பது எவ்வளவு அபத்தமாய் இருக்கிறதென்று பாருங்கள்.

ஞானஸ்நானம் மனிதர் மறுபிறப்படைய வேண்டியதற்கு அடையாளமாகவும், நற்கருணை மனிதருடைய

பாவத்துக்குப் பிரயாச்சித்தம் செய்யப்பட்டதை நினைவு கூருவதற்கு அடையாளமாகவும் நியமிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் இயேசுநாதர் நியமித்தும் அப்போஸ்தலர் கைக்கொண்டதும் வேதத்தில் எழுதிஇருப்பதுமான தேவ திரவிய அநுமானங்கள் இரண்டே அல்லாமல் ஏழு அல்ல; ஏழேயானால் அவற்றுள் மெய் விவாகமும் ஒரு தேவ திரவிய அநுமானந்தானே; பின்னை ஏன் உங்கள் குருக்கள்மார் அதைக் கைக்கொள்ளுகிறதில்லை? இதில் இருக்கிற சூதை ரோமானித்தாராகிய நீங்களே கவனித்துக் கொள்ளுங்கள்.

தேவ வசீகரம்

அப்பத்தின் குணங்களுக்குள்ளேயும் முந்திரிகைப் பழ இரசத்தின் குணங்களுக்குள்ளேயும் இயேசுநாத சுவாமியுடைய திருச் சரீரமும் திரு இரத்தமும் திரு ஆத்துமாவும் தேவ சுபாவமும் அடங்கியிருக்கிறதென்று ரோமான் மார்க்கத்தார் சொல்லுகிறார்கள். இந்த உபதேசம் 1,000 வருஷத்துக்குப் பிந்தி உண்டானது. இப்படிப்பட்ட கொள்கையைக் குறித்து என்ன சொல்லலாம்? தேவ தூஷணமே அல்லாது வேறல்ல. தேவ நற்கருணையில் கொண்டாடப் படுகிற அப்பம் இயேசுநாதர் ஆவாரா? அவருக்குள்ள சுயம்பு, நித்தியம், மாறுமை, சர்வவியாபகம், சர்வஞ்ஞத்துவம், சர்வவல்லமை, சுயாதீனம், ஒருமை, தயவு, ஞானம், பரிசுத்தம், நீதி, இரக்கம், உண்மை என்ற இந்த லட்சணங்களும், சற்குணங்களும் அந்த அப்பத்திலாவது இரசத்திலாவது உண்டா? இயேசுநாதர் இப்போது மகிமையுள்ள தூலமாய்ப் பரலோகத்தில் இருக்க, அவர் பூலோகத்திலுள்ள ஒவ்வொரு ரோமான் கோவில் பீடங்களில் ஏக காலத்தில் பிரசன்னமாய் இருக்கிறது எப்படி? ஆவியின்படி இருப்பாரே அல்லாமல் சரீரத்தோடே இருக்கவே மாட்டார். நீங்கள் இப்போது அவரைச் சரீரத்தோடே பார்க்கிறீர்களா?

அப்பத்தை ஆயிரம் பங்குகளாக வகுத்தாலும், அதின் ஒவ்வொரு பங்கிலும் இயேசுநாதரின் சரீரமும்

ஆத்துமாவும் தேவ சுபாவமும், மனித சுபாவமும் முழுதும் இருக்கிறதென்று சொல்லுகிறீர்கள். இதற்குத் திருஷ்டாந்தமாக, ஒரு கண்ணாடியை ஆயிரம் சில்லாக உடைத்து பார்த்தாலும், அந்த ஒவ்வொரு சில்லிலும் முகத்தின் பூரண தோற்றம் காணப்படுகிறதே என்கிறீர்கள். இது எப்படி இருக்கிறதென்றால், கண்ணுக்குள் கி ரு ஷ் ண ன் இருக்கிறான் என்று அஞ்ஞானிகள் சொல்வதற்குச் சமானமாய் இருக்கிறது. ஒளியுள்ள எந்த வஸ்துக்களுக்கு முன்பாக எந்தப் பொருளை எடுத்துக் காட்டினாலும், அந்தப் பொருளின் ரூபம் காணப்படும். அந்தப்படி காணப்பட்டாலும், அது அந்தப் பொருளாக மாட்டாதென்பது எல்லாருக்கும் தெரிந்த காரியம்.

"இது என் சரீரம், இது என் இரத்தம்" என்று இயேசுநாதர் சொன்னது உண்மைதான்: ஆனால் இதைப் போலொத்த அநேக வசனங்கள் வேதத்தில் உண்டு. நானே வாசல், நானே வழி என்றும்; நானே மெய்யான திராக்ஷசெடி என்றும்; ஏழு பசுக்கள் ஏழு வருஷங்கள் என்றும்; கர்த்தருடைய ஆட்டுக்குட்டி பஷா என்றும்; எல்லா மாம்சமும் புல் என்றும்; விதையானது தேவ வசனம் என்றும்; ஞானக்கன் மலை அவர்களோடே சென்றது. அந்தக் கன்மலை கிறிஸ்து என்றும்; ஏழு குத்து விளக்குகள் ஏழு சபைகள் என்றும்; பத்துக் கொம்புகள் பத்து ராஜாக்கள் என்றும்; இவ்விதமாக அநேக வசனங்கள் உண்டு. குறிக்கும் பொருளை வேறொரு பொருளால் குறிப்பிட்டுப் பேசுவது யூதருக்குள் வழக்கம். ஆகையால் இயேசுநாதர் அப்பத்தைப் பார்த்து: இது என் சரீரமாய் இருக்கிறது என்று சொன்ன பொழுது, உடனே சீஷர்கள் அதை அவருடைய சரீரத்துக்கு அடையாளம் என்று அறிந்து கொண்டார்கள் என்பதற்கு யாதொரு சந்தேகம் இல்லை

"இது உங்களுக்காகக் கொடுக்கப்படுகிற என்னுடைய சரீரமாய் இருருக்கிறது" என்று லூக். 22: 19-ம் வசனத்தில் சொல்லியிருப்பதை ரோமான் மார்க்கத்தார் சொல்லருத்தமாக வைத்துக்கொண்டால், 20-ம் வசனத்தில் "இந்தப் பாத்திரம் உங்களுக்காகச் சிந்தப்படுகிற என்னு

டைய இரத்தத்தினால் ஆகிய புதிய உடன் படிக்கையாய் இருக்கிறது'' என்று சொல்லியிருப்பதை ஏன் சொல்லருத்தமாகக் கொள்ளுகிறதில்லை? முந்தின வசனத்தின்படி அப்பம் அவருடைய சரீரமாக மாறினால், பிந்தின வசனத்தின்படி பாத்திரம் உடன்படிக்கையாக மாற மாட்டாதோ? இந்த இரண்டு வசனங்களும் ஒரே காலத்தில், ஒரே ரட்சகரால் சொல்லப்பட்டவைகள்தானே.

என்னை நினைவு கூரும்படி இதைச்செய்யுங்கள் என்று இயேசுநாதர் சொல்லியிருக்கிறார்; ஆனால் ரோமான் மார்க்கத்தாரே, நீங்கள் அப்பமும் இரசமும் இயேசுநாதராக மாறிப்போனவை நினைவுகூறச் சொல்லுகிறீர்களா? அல்லது அவருடைய திருமேனி நமக்காகச் சிலுவையில் அறையப்படக் கொடுக்கப்பட்டதையும் அவருடைய திரு ரத்தம் நமக்காகச் சிந்தப்பட்டத்தையும் நினைவு கூறும்படி சொல்லுகிறீர்களா? நினைத்துப்பார்த்துச் சொல்லுங்கள்.

குருவானவர் அப்பத்தை எடுத்துப் பூசை செய்து ஆசீர்வதித்த பிறகு அப்படி மாறுகிறது என்று சொல்லுகிறீர்கள். அப்ப பில்லை இயேசுநாதரால், அது ஓர் ஆள் பாரமாக இருக்கிறதா? அதைக் குத்திப்பார்த்தால் இரத்தம் வடிகிறதா? அல்லது இயேசுநாதரின் எந்த இலட்சணமாவது குணமாவது அதிலே காணப்படுகிறதா? இயேசுநாதரும் இரசத்தை ஆசீர்வதித்த பிறகு அதை இரசம் என்றே சொல்லுயிருக்கிறார். (மத். 26: 29.) சின்னப்பரும் அதை ஆசீர்வதித்த பிறகு அப்பத்தை அப்பம் என்றும், இரசத்தை இரசம் என்றும் சொல்லியிருக்கிறார். (1 கொரி. 11: 26: 27.) இயேசுநாதரையும் சின்னப்பரையும் விட உங்கள் குருமார் முக்கியஸ்தர்களா? நீங்களே யோசிங்கள். ''அப்பொழுது யூதர்கள் இவன் தன்னுடைய மாம்சத்தை எப்படி நமக்குப் புசிக்கக் கொடுப்பான் என்று தங்களுக்குள்ளே வாக்குவாதம் பண்ணினார்கள்'' என்று யோவா. 6: 53-ம் வசனத்திலும், தமது சீஷருக்குள் மயக்கம் உண்டாய் இருந்ததை இயேசுநாதர் அறிந்து, அதை ''ஆவியே உயிர்ப்பிக்கிறது, மாம்சமானது ஒன்றுக்கும் உதவாது; நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும்

ஜீவனுயும் இருக்கிறது'' (யோவா. 6: 63.) என்னும் வசனத்தைக் கொண்டு விளக்கிக் காட்டியிருப்பதைக் கவனித்துப் பாருங்கள்.

ஆனுல் சர்வேஸ்பரனுல் கூடாத காரியம் உண்டோ என்றும், அவர் அற்புதங்களைச் செய்யவில்லையோ என்றும் சொல்லுவீர்கள். சர்வேஸ்பரன் சுபாவ காரியத்துக்கு விரோதமாக ஒன்றும் செய்கிறதில்லை தேவன் இரண்டு குன்றுகள் இல்லாமல் பள்ளத்தாக்கை உண்டு பண்ண மாட்டார். மூன்றையும் ஒன்றையும் சேர்த்து. ஐந்து என்று சொல்ல மாட்டார். அவர் செய்த அற்புதங்கள் யாவும் சுபாவத்துக்கு ஏற்றதாகவே செய்திருக்கிறுர் அவர் தண்ணீரைத் திராட்ச ரசமாக்கினபோது, இரசத்துக்குள்ள சகல குணங்களும் அதில் இருந்தன. மீன் வாயில் பணத்தை உண்டாக்கினபோது, அந்தப் பணத்தை உரைத்துப் பார்த்தால், மெய்ப் பணத்துக்குரிய சகல குணமும் அதில் உண்டாயிருக்கும். அதுபோல, அப்பம் தேவனுக மாறினுல், தேவனுக்குரிய சகல இலட்சணங்களும் அந்த அப்பத்தில் காணப்படவேண்டும். அப்படிக் கில்லாமல் இருப்பதால், ரோமான் மார்க்கத்தாரின் தேவ வஜீகர உபதேசம் சுத்த பயித்தியம் என்று தாராளமாகச் சொல்லலாம்.

அப்பமும் இரசமும் இயேசுநாதரின் மாம்சத்துக்கும் இரத்தத்திற்கும் அடையாளமாக மாத்திரம் இருக்கிறது என்று இரண்டாம் நூற்ருண்டில் இருந்த கிலேமெஞ்சு, நான்காம் நூற்ருண்டில் இருந்த அதநாசியர், ஐந்தாம் நூற்ருண்டில் இருந்த தியோடேரேத், ஆரும் நூற்ருண்டில் இருந்த வெர்க்கந்துள், எட்டாம் நூற்ருண்டில் இருந்த அம்லர் முதலான அநேக சபையின் பிதாக்கள் சொல்லியிருக்கிருர்கள். இந்த தேவ வஜீகர உபதேசம் இதற்கு முன்னூறு வருஷங்களுக்கு முன்னே திரென்று பட்டணத்தில் கூடின சங்கத்தில் ரோமைச் சபையின் விசுவாசப் பிரமாணமாக ஏற்படுத்திக் கொள்ளப்பட்டது. அப்பமும் இரசமும் இயேசுநாதராக மாறுகிறது என்று விசுவாசித்து, அதை வணங்கி வருவது விக்கிரக ஆராதனை

யாக இருக்கிறது. இந்த உபதேசம், சுபாவ புத்திக்கும் வேதத்திற்கும் பூர்வீகப் பிதாக்களுடைய ஒருமித்த கருத்துக்கும் முற்றிலும் விரோதம் என்று காண்பித்தோம்.

ஆகையால், ரோமான் மார்க்கத்தாரே, இப்பேர்ப்பட்ட தப்பிதமான உபதேசத்தையும் கொள்கையையும் விட்டு, பாடுபட்ட இரட்சகரை இந்தத் திரவியங்களின் வழியாய் விசுவாசக் கண்ணினுல் நோக்கிப் பார்த்து, அவரையே ஆவியின் பிரகாரம் வணங்குவீர்களாக.

பாதி நற்கருணே

ரோமான் மார்க்க குருமார், ஜனங்களுக்கு அப்பத்தை மாத்திரம் கொடுக்கிருர்கள்; இரசத்தைக் கொடுக்கிறதே இல்லே. ஏன் இப்படிச் செய்கிறீர்கள் என்று கேட்டால் சரீரத்தில் இரத்தம் சேர்ந்திருப்பதுபோல அப்பத்தில் இயேசுநாதருடைய சரீரமும் இரத்தமும் அடங்கியிருக்கிறது என்று சொல்லுகிருர்கள். இது எப்படி இருக்கிறதென்ருல்; சாப்பாட்டில் தண்ணீர் சேர்ந்திருக்கிறது; ஆகையால் வேறே தண்ணீர் குடிக்கக் கொடுக்கப்படாது என்பதற்குச் சரி. இது நற்கருணேயை ஸ்தாபித்த இயேசுநாதருக்கும் அதைப் பற்றி விவரமாய் எழுதியிருக்கிற அர்ச்சியசிஷ்ட சின்னப்பருக்கும் 1000-வருஷ காலமாய்த் திருச்சபைக்கும் இல்லாத ஞானமாய் இருக்கிறது.

இப்பேர்ப்பட்ட ஞானத்தை ரோமான் மார்க்கத்தார் யாரிடத்தில் அடைந்தார்களோ தெரியவில்லே. இயேசுநாதர் இந்தஇரண்டையும் சர்வஜனங்களுக்கும் ஏற்படுத்தியிருக்கிருர் என்று மத்தேயும், மாற்கும், லூக்காவும், யோவானும், சின்னப்பரும் எழுதியிருக்கிருர்கள். (மத். 26: 27; மாற். 14: 22, 23; லூக் 22: 11-20; யோவா. 6: 53; 1 கொரி. 11: 26.) இவர்கள் வேதமாக எழுதினதை நாம் நம்பவேண்டியதோ? 1000-வருஷத்துக்குப் பிந்தி ரோமானித்தார் பேதமாகச் சொல்லுகிறதை நம்பவேண்டியதோ? இயேசுநாதர் தேவ நற்கருணேயை ஏற்படுத்தின

போது அங்கே இருந்தவர்கள் சீஷர்கள்தானே; அவர்கள் தானே இரண்டையும் எடுத்தவர்கள். அதுபோல குருக் கள்மார்மாத்திரம் இந்த இரண்டையும் அனுபவித்து வரு வது நியாயம் என்று ரோமான்மார்க்கத்தார் ஒருவேளை சொல்லுவார்கள். இது அதனப்பிரசங்கம். குருக்கள் தவிர வேறே பேர் எடுக்கத் தகாது என்று இரட்சகர் விலக்கியிருக்கிருரா? சபையார் எல்லாரும் இந்தத் திவ் விய ஏற்பாட்டில் அடங்கிய இரண்டையும் அநுசரிக்க வேண்டும் என்று சின்னப்பர் கொரிந்து பட்டணத்தில் இருந்த சபையாருக்கு எழுதியிருக்ருர். (1கொரி.11:23-28) இது அநேகருடைய பாவமன்னிப்புக்காகச் சிந்தப் படுகிற என்னுடைய இரத்தமாய் இருக்கிறது என்று சொன்னரே, அதை சபையாரும் நினைத்து விசுவாசித்து பாவமன்னிப்படைய வேண்டாமா? குருக்கள்மாருக்கு மாத்திரமோ இரட்சகர் தமது திருஉதிரத்தைச் சிந்தினர்? இரத்தம் சிந்துதல் இல்லாமல் பாவமன்னிப்பு இல்லை என்றும் சொல்லியிருக்கிருர். பாவமன்னிப்பு உண்டாகும் படியாகக் குருக்கள்மாருக்கே அந்த இரத்தம் அவ்வளவு அவசியமானுல், அது மற்ற மனிதருக்கும் எவ்வளவோ அதிக அவசியமாய் வேண்டும் என்பதைக் குறித்து நீங் களே யோசித்துப்பாருங்கள். கிறிஸ்துவைப் பின் செல் லுகிறவர்கள் எல்லாரும் கிறிஸ்துவின் மாதிரிப்படி அல் லவா செய்ய வேண்டும்.

ரோமான் மார்க்கத்தாரே, நீங்கள் அவர் செய்தபடி செய்யாமல் இருப்பதால் உங்களைக் கிறிஸ்துவின் பிள்ளை கள் என்று சொல்லலாமா? நீங்கள் இயேசுநாதரின் ஏற் பாட்டில் பாதியை ஒப்புக்கொண்டு, மற்றப் பாதியை நீங் கள் விட்டு விடலாமா? மேலும் நமக்காக ஒப்புக் கொடுக் கப்பட்ட சரீரத்தையும் சிந்தப்பட்ட இரத்தத்தையும் பூர ணமாக நினைக்கிறதோ? பாதி நினைவும பங்கிட்ட விசுவாச முமாய் இருக்கிறதோ? சர்வ ஞானமுள்ள இயேசுநாதர், சர்வ ஜனங்களும் விசுவாசித்துக் கைக்கொள்ளும்படியாக இரண்டு பொருளையும் ஏற்படுத்தியிருக்க, அதில் உங்கள் ஞானத்தைக் கொண்டு ஒன்றை விலக்கி விட்டால் அந்தத் திவ்விய ஏற்பாட்டை நீங்கள் அழித்துப் போடவில்லையா! இப்படி நீங்கள் தேவனுல் விதிக்கப்பட்டிருப்பதை விலக்கிப்

போடலாமா? இதைக் குறித்து தேவ வசனம் சொல்லுகி றதைக் கேளுங்கள்: "ஒருவன் இந்தத் தீர்க்கதரிசன புஸ்தகத்தின் வசனங்களிலிருந்து எதையாகிலும் எடுத்துப் போட்டால், ஜீவ புஸ்தகத்திலிருந்தும் பரிசுத்த நகரத்தி லிருந்தும் இந்தப் புஸ்தகத்தில் எழுதப்பட்டவைகளிலிருந் தும் அவனுடைய பங்கை தேவன் எடுத்துப் போடுவார்." (வெளி. 22: 19.)

பிரியமானவர்களே, இதை நன்றாய் நினைத்து உங்கள் தப்பான வழிகளில் இருந்து விலகுங்கள்.

ஞானஸ்நானம்

ஞானஸ்நானத்தினால் ஜென்ம பாவமும் கர்ம பாவ மும் நிவாரணமாய்ப் போகிறதென்று ரோமான் மார்க் கத்தார் சொல்லுகிறார்கள். இதற்கு ஆதாரம் எங்கே யிருந்து காட்டுவார்களோ தெரியவில்லை

ஒருவன் தன் ஆயுள் காலமெல்லாம் பாவம் செய்து போட்டு, கடைசியில் குருவானவரிடத்தில் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டால், அவனுடைய ஜென்ம பாவமும் கர்ம பாவமும் நீங்கிப் போகுமா! அவன் உண்மையாய்க் கிறிஸ்துவை விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றான் என்று குருவானவருக்குத் தெரியுமா? மறு பிறப்பாகிய புதுக் குணம் ஞானஸ்நானத்தினால் வருகிறதோ! ஸ்பிரித்துசாந் துவாகிய பரிசுத்த ஆவியினால் வருகிறதோ? மறுபிறப்புக் குக் காரணம் பரிசுத்த ஆவி என்று வேதம் சொல்லுகிறது (யோவா. 3: 6; தீத். 3: 5.) ரோமானித்தாரோ மறுபிறப் புக்கு ஞானஸ்நானம் காரணம் என்று சொல்லுகிறார்கள்; இது ஏறுக்குமாறான உபதேசமாய் இருக்கிறது. கிறிஸ்த வர்கள் ஞானஸ்நானத்தை எந்த இடத்திலும் எக்காலத்தி லும் எந்த வயதிலும் இலகுவாய்ப் பெற்று விசுவாசிகளின் குடும்பத்தில் சேர்க்கப்பட இரட்சகர் இந்த ஏற்பாட்டை ஸ்தாபித்திருக்கிறார்.

பூர்வீகத்தில் சுன்னத்தைப் பெற்றவனுடைய பாவம் நீங்காமல், அவன் யூத மார்க்கத்தைச் சேர்ந்தவன் என்றும் தேவனுடைய உடன்படிக்கையைக் கைக்கொள்ளுகிறவன் என்றும், அந்த சுன்னத்துக் காட்டினது போல, இக்காலத்தில் ஞானஸ்நானம் பெற்றவனுடைய பாவம் நீங்காமல், அவன் கிறிஸ்து மார்க்கத்திலே சேர்ந்தவன் என்றும், கிறிஸ்துவினுடைய கட்டளையைக் கைக்கொள்ளுகிறவன் என்றும் இந்த ஞானஸ்நானம் காட்டுகிறது. ஆகையால் ஒருவன் ஞானஸ்நானம் பெறும் பொழுது. அவன் உலக சபையை விட்டு விட்டு, கிறிஸ்து சபையைச் சேர்ந்திருக்கிறுன் என்பதற்கு ஞானஸ்நானம் அடையாளமாக இருக்கிறது. ‘ ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான்” என்று இயேசுநாதர் சொல்லியிருக்கிருர். (யோவா. 3:3) மறு பிறப்படைவதற்குப் பரிசுத்த ஆவி வேண்டும். சரீரம் சுத்தமாக தண்ணீர் அவசியம் போல, இருதயம் சுத்தமாகப் பரிசுத்த ஆவி அகத்தியமாய் வேண்டியது ஆத்துமத்தில் உள்ள பாவம் ஆவியின் பலத்தினுல் போகுமே அல்லாமல், மேலே தெளிக்கும் தண்ணீரால் பாவம் போகும் என்று பேதை தானும் சொல்லமாட்டான். அப்படிச் சொன்னுல் அஞ்ஞானிகள் காசி தீர்த்தத்தினுல் பாவம் நிவாரணமாகும் என்று சொல்லுவதற்குச்சரி. ஞானஸ்நானம் பெற்ற உடனே ஒருவனுடைய ஜென்ம பாவமும் கர்ம பாவமும் தொலைந்துபோனுல், இனி அவனுக்குக் கோவில் என்னத்திற்கு? குருக்கள் என்னத்திற்கு? மற்றக் கிருபையின் எத்தனங்களை அவன் அநுசரிக்க வேண்டியது என்ன?

மேலும் ரோமான் மார்க்கத்தார் ஞானஸ்நானம் கொடுக்கும்பொழுது நாவிலே உப்புப் போடுகிருர்கள், பேயோட்டுகிருர்கள், நாசிலும் காதிலும் எச்சிலைத் தொட்டு வைக்கிருர்கள், சிரசிலே எண்ணெய் பூசுகிருர்கள், எரிகிற மெழுகுதிரியைக் கையில் கொடுக்கிருர்கள். என்ன ரோமான் மார்க்கத்தாரே, இது சரியா? இயேசுநாதருடைய சீஷர்கள் இப்படிச் செய்தார்களா? ‘ ஒருவன் இவைகளோடே எதையாகிலும் கூட்டினுல், இந்தப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிற வாதைகளை தேவன் அவன்மேல்

கூட்டுவார்'' (வெளி. 22:18) என்று தேவ வாக்குச் சொல்லுவதை வாசித்தறியுங்கள். மேலும் நீங்கள் கப்பலுக்கும் வீட்டுக்கும் மணிக்கும் ஞானஸ்நானம் கொடுப்பதும் சரியா? அவைகள் என்ன பாவம் செய்தன? மணிகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கும் உபதேசம், 1000 வருஷத்துக்குப் பிந்தி உண்டாயிற்று. ரோமான் மார்க்கத்தாரே, நீங்கள் இந்த தப்பான உபதேசத்தை விட்டு, கிறிஸ்துவின் சுத்த உபதேசத்தைக் கைக்கொள்ளுங்கள்.

பாவ சங்கீர்த்தனம்

ஒருவன் ஞானஸ்நானம் பெற்ற பிறகு, செய்த பாவங்களை எல்லாம் குருவானவரிடத்தில் அறிக்கையிட்டால், அவன் பாவங்கள் மன்னிக்கப்பட்டுப் போகும் என்பது ரோமான் மார்க்கத்தாரின் கொள்கை. இந்த ஏற்பாடு 1215-ம் வருஷத்தில் புதிதாய் உண்டானதேயல்லாமல் அதற்கு முந்தி இல்லை.

இந்த ஏற்பாடு நம்முடைய சுய புத்திக்கே விரோதமாய் இருக்கிறது. எப்படியென்றால், நம்முடைய தகப்பனுக்கு விரோதமாய் நாம் குற்றஞ் செய்து போட்டு, வேறொரு மனிதனிடத்தில் போய் மன்னிப்புக் கேட்டால் சரியா? கெட்ட குமாரன் தன் தப்பிதத்தை உணர்ந்து தன் தகப்பனிடத்துக்கே போனான் என்று அறிகிறோம். ஆனால் நியாயாதிபதிகளிடத்திற்கு நாம் நேரே போகாமல் உத்தியோகஸ்தர் மூலமாகப் போகிறோமே என்பதாக ரோமான்மார்க்கத்தார் சொல்லுவார்கள். உலக நியாயாதிபதிகள் மனுஷர், அவர்களுக்கு நம்முடைய மனதில் இருக்கிற காரியங்கள் தெரியமாட்டாது; ஆனால் பரலோகத்துக்கும் பூலோகத்துக்கும் நியாயாதிபதியானவர் தேவன். அவருக்கு நம்முடைய இருதயங்களில் இருப்பதெல்லாம் தெரியும். மேலும் இயேசுநாதர்: ''நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாய் இருக்கிறேன். ஒருவன் என்னாலேயல்லாமல் பிதாவினிடத்தில் செல்வதில்லை' என்றார். ரோமான் மார்க்கத்தாரே, இரட்சகர் சொல்லைக்கேட்டு, மன்னிப்புக்

காக அவரிடத்துக்குப் போங்கள்; பாப்பு சொல்லைக்கேட்டு, குருமாரிடத்துக்குப் போகவேண்டாம். பூர்வீகத்தில் இருந்த தாவீது தானியேல், எஸ்ரு, நெகேமியா முதலான பேர்களும், இரட்சகருடைய காலத்தில் இருந்த பேர்களும் யாரிடத்தில் பாவத்தை அறிக்கையிட்டார்கள்? தேவனிடத்திலேயா? குருவானவரிடத்திலேயா? ஆனால் யூதாஸ் காரியோத்து மாத்திரம் பணத்தையும் எடுத்துக் கொண்டு குருக்கள் இடத்திற்குப் போனன்; அங்கே மன்னிப்புக் கிடையாததால் போய் நான்றுகொண்டு செத்தான்.

"உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒருவர் ஜெபம் பண்ணுங்கள்" (யாக். 5: 16) என்று சொல்லியிருக்கிறதே அல்லாமல், குருவானவர் இடத்திலே போய் அறிக்கையிட வேண்டும் என்று வேதத்தில் ஒரு இடத்திலும் சொல்லப்படவில்லை. ஆனல் பாவங்களை மன்னிக்கும்படியாக அப்போஸ்தலருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டு இருந்ததென்று பின்னல் வருகிற வேத வசனத்தை எடுத்துச் சொல்லுவார்கள். அதாவது: "எவர்களுடைய பாவங்களை மன்னிப்பீர்களோ, அவர்கள் பாவங்கள் மன்னிக்கப்படும்; எவருடைய பாவங்களை மன்னியாதிருப்பீர்களோ, அவர்களுக்கு அவைகள் மன்னிக்கப்படாதிருக்கும்." இயேசுநாதர் இப்படிச் சொன்னதினலே, இன்னருக்குப் பாவமன்னிப்பு உண்டு என்றும், இன்னருக்கு இல்லை என்றும் கூறி அறிவிக்கும்படியாக அப்போஸ்தலருக்கு அதிகாரத்தையும் கட்டளையையும் அருளிச்செய்தாரேயன்றி; பாவத்தை மன்னிக்க அவர்களுக்கு அதிகாரம் கொடுக்கவில்லை. எவர்களுடைய பாவங்கள் மன்னிக்கப்படும் என்று கூறுகிறீர்களோ, அவர்களுக்கு மன்னிக்கப்படும் என்கிற கருத்தே அந்த வாக்கியத்திற்குச் சரியான அருத்தம். கிறிஸ்துவை விசுவாசிக்கும் பேர்களுக்குப் பாவமன்னிப்புக் கிடைக்குமேயன்றி மற்ற பேர்களுக்கல்ல.

ரோமான் மார்க்கத்தார் கருத்தின்படியே வைத்துக் கொண்ட போதிலும், அந்த அதிகாரம் அப்போஸ்தலருக்குக் கொடுக்கப்பட்டதே அல்லாமல்,இப்போது இருக்கிற குருக்கள்மாருக்குக் கொடுக்கப்படவில்லை ஆனல் அவர்கள் அப்போஸ்தலருடைய வரிசையின்படி வந்தவர்கள்

என்று சொல்லுவார்கள். துரைத்தன விஷயத்திலும் மற்ற விஷயத்திலும் மேலதிகாரிகள், ஒரு உத்தியோகஸ் தனுடைய நெடுநாள் அநுபோகத்தையிட்டும், அவனு டைய உண்மை நடத்தை குணம் முதலானதுகளைக் கவனித் தும் அவனுக்குச் சில விசேஷித்த அதிகாரத்தையும் சிலாக் கியத்தையும் கொடுப்பதுபோல, இயேசுநாதர் அப்போஸ் தலருக்கு மாத்திரம் இந்த அதிகாரத்தைக் கொடுத்தார்; மேலும் இந்த அதிகாரத்தை அப்போஸ்தலருக்குச் சும்மா கொடுக்கவில்லை. அவர் அவர்களின் பேரில் ஊதி, ஸ்பிரித்து சாந்துவாகிய பரிசுத்த ஆவியின் வரப்பிரசா தத்தை முந்திக் கொடுத்து. பிந்தி இந்த அதிகாரத்தை அருளினர். இவ்விதமாகப் பாப்புக்களுக்காவது குருமா ருக்காவது கொடுத்திருப்பது உண்டா?

அவர்களுக்கு அந்த அதிகாரம் இருந்ததினலே அவர் கள் அற்புதங்கள் செய்தார்கள்; இவர்களுக்கு அந்த அதி காரம் இருந்தால், இவர்களும் நாளதுவரையில் அற்புதங் கள் செய்து வரலாமே. அற்புதங்கள் செய்கிற வரமும் பாவங்களை மன்னிக்கிற அதிகாரமும் அப்போஸ்தல ரோடே நின்று போய்விட்டது. அப்போஸ்தலர் யாருக் காவது பாவங்களை மன்னித்திருப்பதாக நீங்கள் வேதத் தில் எடுத்துக் காட்டக் கூடுமா?

"வருத்தப்பட்டுப் பாரம் சுமந்து கொள்ளுகிறவர்க ளாகிய நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்" என்று இயேசுநாதர் திருவுளம்பற்றியிருக்கிறரே அல்லா மல், நீங்கள் எல்லாரும் பாவ மன்னிப்புக்காக குருமாரி டத்துக்குப் போங்கள் என்று அவர் ஒருக்காலும் சொல்ல வில்லை.

மேலும் "பணமுமின்றி கிரயமுமின்றி தீவிதிராட் சப்பழ இரசமும் பாலும் கொள்ளுங்கள்" என்று சொல்லி யிருக்கிறரேயன்றி, நீங்கள் பாவ மன்னிப்புக்காகப் பணத்தை எடுத்துக்கொண்டு குருமாரிடத்தில் சென்று, பாவ மன்னிப்பைக் கிரயத்துக்கு வாங்கிக் கொள்ளுங்கள் என்று அவர் ஒருபோதும் சொல்லவில்லை. ஆனல் ரோமான் மார்க்க குருமாரோ, தேவ கட்டளைக்கு முற்

றிலும் விரோதமாகப் பாவ மன்னிப்புக்குத் தங்களிடத்தில் வரும்படியாக அழைக்கிறார்கள். இப்படிப்பட்ட கெடுதிக்காரர் திருச்சபையிலே தோன்றுவார்கள் என்று சர்வேஸ்பரன் ஏற்கெனவே தீர்க்கதரிசனமாக உரைத்திருக்கிறார். எப்படி என்றால்: ''அவன் எதிர்த்து நிற்கிறவனும், தேவன் என்னப்படுவது எதுவோ, ஆராதிக்கப்படுவது எதுவே, அவை எல்லாவற்றிற்கும் மேலாகத் தன்னை உயர்த்துகிறவனும், தேவனுடைய ஆலயத்தில் தேவன்போல் உட்கார்ந்து, தன்னைத்தான் தேவன் என்று காண்பிக்கிறவனுமாயும் இருப்பான். அவனைக் கர்த்தர் தம்முடைய வாயின் சுவாசத்தினாலே அழித்து, தம்முடைய வருகையின் பிரசன்னத்தினாலே நாசம் பண்ணுவார்'' (2 தெச. 2:4, 8) என்று எழுதப்பட்டிருப்பதைக் கவனியுங்கள், புத்தியடையுங்கள்.

அவஸ்தை பூசுதல்

இந்த ஏற்பாடு 558-ம் வருஷத்தில் உண்டாயிற்று. ஒருவன் சாக ஏதுவாய் இருக்கையில் குருவானவர் பரிசுத்த எண்ணெயை அவனுடைய கண், காது, நாசி, வாய், கை, கால் முதலிய அவயங்களில் பூசுவதினாலே அவனை மரணத்திற்கு ஆயத்தப்படுத்துகிறார் என்று ரோமான் மார்க்கத்தார் சொல்லுகிறார்கள். இதற்கு ஆதாரமாக, ''உங்களில் ஒருவன் வியாதிப்பட்டால், அவன் சபையின் மூப்பரை வரவழைப்பானாக: அவர்கள் கர்த்தருடைய நாமத்தினாலே அவனுக்கு எண்ணெய் பூசி, அவனுக்காக ஜெபம்பண்ணக்கடவார்கள் அப்பொழுது விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும்; கர்த்தர் அவனை எழுப்புவார், அவன் பாவம் செய்தவனானால் அது அவனுக்கு மன்னிக்கப்படும்'' (யாக். 5: 14, 15) என்ற வாக்கியத்தை எடுத்து சொல்லுகிறார்கள். அப்போஸ்தலருடைய நாட்களில் அற்புதம் செய்யும் வரங்கள் இருந்தன; அவைகளினால் மனிதர் வியாதியில் இருந்து சொஸ்தமாக்கப்பட்டார்கள். வியாதிப்பட்டவர்களுக்கு அப்போஸ்தலர் எண்

ணெய் பூசி அவர்களைச் சொஸ்தமாக்கினார்கள். (மாற். 6:13) பூர்வீகத்தில் எண்ணெய் பூசுதல் வியாதியை நீக்கு வதற்கு அடையாளமாக வழங்கப்பட்டதே தவிர, ரோமான் மார்க்கத்தார் செய்வது போல அது மரண ஆயத்தத்திற்காக ஒருபோதும் பிரயோகம் பண்ணப்பட வில்லை. சரீரத்தின் மேல் எண்ணெய் பூசினால் ஆத்துமத் தின் பாவம் எப்படிப் போகும்? ஆதியில் தண்ணீர் எண் ணெய் முதலிய ஏதுக்களினாலும் சொல்லினாலும் பாவங் களும் வியாதிகளும் நீக்கப்பட்டது மெய்தான்; ஆனால் அது அற்புதங்கள் செய்யும் வரத்தையுடைய காலத்தில் நடந்தது; அந்த வரம் எப்போது நின்று போனதோ அப் போதே எண்ணெய் பூசுதல் நின்று போயிற்று. பேதெஸ்தா குளத்தின் தண்ணீர் சம்மனசினால் கலக்கப்பட்டு அமர்ந்த பிறகு அந்தத் தண்ணீரில் சுகம் உண்டா! இப்போது அவஸ்தை பூசி குணமாக்கி வருகிறார்களா? முற்காலத்தில் அப்போஸ்தலர் வியாதிகளுக்கு எண்ணெய் பூசி, ஜெபம் செய்து சுகமாக்கி வந்தார்கள். இக்காலத்தில் ரோமான் குருமார் வியாதியஸ்தருக்கு எண்ணெய் பூசி, மந்திரங் கள் சொல்லி, வேதத்தில் இல்லாத சடங்குகள் செய்து மரணத்துக்கு ஆயத்தப்படுத்துவதும் தவிர பாவத்தையும் மன்னித்து விடுகிறோம் என்கிறார்கள். இதனால் ரோமான் மார்க்கத்தார் இரக்ஷிக்கப்படுவதற்கு வெகு இலகுவான பாதையைத் திறந்து விடுகிறார்கள் ஒருவன் தன் ஆயுள் நாளெல்லாம் சகல பாவங்களையும் செய்துபோட்டுக் கடை சியில் குருவானவரிடத்தில் அவஸ்தை பெற்றுக்கொண் டால் போதுமா? இப்படி அவஸ்தை பெற்றுப் பாவமன் னிப்பை அடைந்தாலும் உத்தரிக்கும் ஸ்தலத்துக்குதானே போகவேணும் அப்படியானால் அவஸ்தை பூசுவதனால் யாதொரு பிரயோசனம் இல்லை என்று பகிஷ்காரமாய்த் தெரிகிறது. ஆகையால் இந்தக் கொள்கையை விட்டு விலகுங்கள்.

பூசைப்பலி

திருச்சபையிலே நடக்கும் பூசைப்பலியை ஒப்புக்கொடுக்கிறவரும் சர்வேஸ்பரன், அதை ஒப்புக்கொள்ளுகிறவரும் சர்வேஸ்பரன், ஒப்புக்கொடுக்கப்படுகிறவரும் சர்வேஸ்பரன் என்றும், அந்தப் பூசையின் பலன் சர்வலோக பாவங்களையும் நீக்க வல்லமையுடையதாய் இருக்கிறதென்றும், அதை எந்த இடத்திலும், எந்த நாளிலும், எந்த நேரத்திலும் செய்யலாம் என்றும் ஞானாமிர்த தடாகம், பூசை மகத்துவத்திலே சொல்லப்பட்டிருக்கிறது. இந்த உபதேசம் சுவாபப்புத்திக்கும் வேதத்திற்கும் நேர் விரோதமாய் இருப்பதும் தவிர, கிறிஸ்துவுக்குப்பின் 1000-வருஷம் வரையில் இருந்த சபைப் பிதாக்களும் இதை ஒப்புக்கொள்ளவில்லை. சிலுவையில் அறையப்பட்ட இயேசுநாதரால் ஆகிய பலிக்கும் பூசையிலே செலுத்தப்படுகிற பலிக்கும் யாதொரு வித்தியாசம் இல்லை என்று ரோமான் மார்க்கத்தார் சொல்லுகிறார்கள். உயிருள்ள சரீரமோ செத்த சரீரமோ எது பூசையிலே பலியாகச் செலுத்தப்படுகிறது? உயிருள்ள சரீரமேயானால் அந்தச் சரீரத்தை வதை செய்தால் அல்லவோ அது பாவம் போக்கும் பலியாகும்? அப்படி நீங்கள் பூசையிலே இயேசுநாதரைக் கொல்லுகிறீர்களா? அல்லது அப்பத்துக்கு உயிர்கொடுத்து அதைக் கொல்லுகிறீர்களா? அப்படி இல்லையே. பின்னை அது எப்படி பலியாகும்? மேலும் அதைச் செத்த சரீரம் என்று சொல்லுகிறீர்களானால் அது பலியாகுமா? அதற்குள் இயேசுநாதரின் தேவ சுபாவமும் மனுஷ சுபாவமும் அடங்கியிருப்பது எப்படி? சிலுவையின் பலி கல்வாரி என்ற ஒரே இடத்தில் எல்லா ஜனங்களும் எல்லாக் காலங்களுக்கும் பூரணமாய் முடியவில்லை என்று சொல்லி, அதை அடிக்கடி செலுத்தி வரலாமா? யூதர் இயேசுநாதர் பேரில் வைத்த பகையினால் அவரை ஒருதரம் கொன்றார்கள்; ரோமான் மார்க்கத்தாரோ, அடிக்கடி செலுத்துகிற பூசையினால் அவரை அடிக்கடி வதை செய்கிறார்கள்

அவர் ஒரேதரம் மாத்திரம் பலியாக வேண்டியதைக் குறித்துப் பின்வரும் வாக்கியங்களில் வெகு திட்டமாய்ச் சொல்லியிருப்பதை வாசித்துப் பாருங்கள். (எபி. 9:28;

7:27; ரோம. 6:9, 10; யோவா. 19:30.) இரத்தம் சிந்துதலில்லாமல் பாவமன்னிப்பு இல்லை என்று தேவன் சொல்ல ரோமான் மார்க்கத்தாரே, நீங்கள் இரத்தம் சிந்துதல் இல்லாமல் பாவமன்னிப்பு உண்டு என்று போதிக்கலாமா? உங்கள் குருமார் அப்பத்தை எடுத்துப் பூசை செய்த பிறகு, அதில் இரத்தமாவது உயிராவது இருப்பதை நீங்கள் கண்டது உண்டா? நற்கருணையை இயேசுநாதர் ஏற்படுத்தி, அதின் மூலமாக அவரை நினைத்துக் கொள்ளும்படியாகச் சொல்லியிருக்க, அதை நீங்கள் வணங்கும்படி எங்கே சொல்லியிருக்கிறது? இயேசுநாதர் தம்மைத் தாமே பலியாக தேவனுக்கு ஒப்புக் கொடுத்திருக்க, நீங்கள் ரொட்டித்துண்டை அவருக்குப் பலியாக கொடுப்பது நியாயமா? ஒரு ரொட்டித் துண்டை நீங்கள் வணங்கலாமா? இயேசுவின் பேரிலுள்ள விசுவாசம் தவிர, மற்றப்படி உங்களுக்கும் அஞ்ஞானிகளுக்கும் என்ன வித்தியாசம்? என்ன ரோமான் மார்க்கத்தாரே, நீங்கள் செய்கிறது எல்லாம் ஏறுக்கு மாருய் இருக்கிறதே. அவர் உங்களை ஒருதரம் சிருஷ்டித்திருக்க, நீங்கள் அவரை அடிக்கடி சிருஷ்டித்துச் சாப்பிடலாமா? அவர் தமது பிதாவின் வலது பாரிசத்திலே வேண்டிக்கொண்டிருக்க அவரை உங்கள் குருமார் பிடித்து பூசையிலே பலியாக செலுத்தத் துணியலாமா? இது உலகத்திலே கேள்விப்படாத விபரீதமாய் இருக்கிறது. ஆகையால் இப்படிப்பட்ட பொய் உபதேசத்தை விட்டு விலகி, "இவரோ, பாவங்களுக்காக ஒரே பலியைச் செலுத்தி, என்றென்றைக்கும் தேவனுடைய வலதுபாரிசத்திலே உட்கார்ந்தார்" (எபி. 10:12) என்கிற மெய் உபதேசத்தைக் கைக்கொள்ளுவீர்களாக.

குருத்துவம்

ரோமான் மார்க்கத்தார் கலியாணம் செய்யத்தகாது என்னும் கொள்கையை உடையவர்களாய் இருக்கிருர்கள். இந்தக் கொள்கை முதல் முதல் 385-ம் வருஷத்தில் சிரிஷியுஸ் என்னும் ரோமாபுரி பிஷோப்பால் ஏற்படுத்தப்பட்டு பிற்காலங்களில் அநேகருக்குச் சரிப்படாமல் வெகு தர்க்

தங்களுக்கு இடமாயிருந்து, கடைசியில் 1563-ம் வருஷத்தில் திறந்து சங்கத்தில் ஸ்திரமாய் ஸ்தாபிக்கப்பட்டது.

வேதத்தில் கண்காணியானவன் ஒரே மனைவியை உடைய புருஷனாய் இருக்கவேண்டும் என்றும், அவன் தன் பிள்ளைகளை எவ்விதத்திலும் யோக்கியமாய்க் கீழ்ப்படியப் பண்ணிக்கொள்ளுகிறவனுமாய் இருக்கவேண்டும் என்றும் சொல்லியிருக்கிறது. (1 தீமோ. 3:24.) ரோமான் மார்க்கத்தாரோ, குருக்கள்மார் விரதத்துவமாய் இருக்கவேண்டும் என்று வருத்தம் பண்ணுகிறார்கள். சின்னப்பர் சொல்லுகிறதை நம்புகிறதா? ரோமான் மார்க்கத்தார் சொல்லுகிறதை நம்புகிறதா?

இந்தத் தகாத ஏற்பாட்டை ரோமான் மார்க்கத்தார் செய்வார்கள் என்று சின்னப்பர் ஏற்கனவே சொல்லி இருக்கிறார். (1 தீமோ. 4: 2) அர்ச்சியசிஷ்ட இராயப்பர் கலியாணம் செய்திருந்தார். (மத் 8: 14; 1 கொரி. 9: 5.) திருச்சபையின் உதவிக்காரரும் மூப்பரும் மனைவிகளை உடையவர்களாய் இருக்கலாம் என்றும், விவாகம் செய்புதல் யாவருக்குள்ளும் கனம்பொருந்தியதாய் இருக்கக்கடவது என்றும் வேதத்தில் எழுதியிருக்கிறது. (1 தீமோ. 3: 12; தீத். 1: 6; எபி. 13: 4.) ஏனோக்கு கலியாணம் செய்து பிள்ளைகளை உடையவனாய் இருந்தும், அவன் தேவனோடே நடந்தான் என்று சொல்லப்பட்டு இருக்கிறது; ஆனால் ரோமான் மார்க்கக் குருமார் கலியாணம் செய்யாமல் இருந்து, ஏனோக்கைப் பார்க்கிலும் பரிசுத்தமாக நடந்து, அவன் சரீரத்தோடே பரலோகம் போனதுபோல இவர்களும் சாகாமல் சரீரத்தோடே பரலோகம் போகப் பார்க்கிறார்களாக்கும். அப்படி அவர்களில் யாராவது, அர்ச்சியசிஷ்ட பாப்பாவது சாகாமல் பரலோகம் போனது உண்டா?

விவாகம் செய்யாதிருத்தல் குருமார்களுக்குப் பரிசுத்தமும் உத்தமுமான நிலைமை என்று ரோமானித்தார் சொல்லுவார்கள். அப்படியானால் பூர்வீகத்திலுள்ள ஆசாரிகள் எல்லாருக்கும் தேவன் அந்த ஏற்பாட்டை ஏன் உண்டாக்கவில்லை? மெய் விவாகம் சர்வ ஜனங்களுக்கும் பிர

யோசனமான உத்தம முறையாக ஏற்படுத்தப்பட்டு, அது தேவ திரவிய அநுமானங்களில் ஒன்றாய் இருந்தால், அதை ஏன் குருமார்களும் பாப்புவும் கைக்கொள்ளப்படாது? சர்வேஸ்பரன் குருமாருக்கு ஒரு சட்டமும், சபையாருக்கு வேறொரு சட்டமுமா உண்டு பண்ணியிருக்கிறார்? பிரியமான ரோமான் மார்க்கத்தாரே, இதைக் குறித்து நீங்களே யோசித்துப் பார்த்து, உங்கள் தப்பான வழிகளில் இருந்து விலகுங்கள்.

ரோமான் மார்க்கம் வேதத்துக்கு விரோதம் என்று ஒப்பித்தல்

ரோமான் மார்க்கம் வேதத்துக்கு விரோதம் என்று சொல்லும்போது, ரோமானித்தாரே சற்று பொறுமையாய் இருந்து கேளுங்கள்: சர்வேஸ்பரன் நமக்கு வேதமாக கொடுத்திருக்கிற மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான், பவுல் பேதுரு யாக்கோபு, யூதா என்பவர்கள் எழுதியவைகளின்படி நீங்கள் நடக்கிறதும் இல்லை; அவைகளை உங்களில் அநேகர் வாசிக்கிறதும் இல்லை வாசிக்க வேண்டுமானால் குருக்கள்மாருடைய அநுமதியைக் கையெழுத்து மூலமாகப் பெற்று வாசிக்கவேண்டும் என்று 1564ம் வருஷத்தில் திரந்து சங்கத்தில் தீர்ப்பாய் இருக்கிறது. அவைகள் வாசிக்கப்படும் இடங்களில் நீங்கள் சந்தோஷமாய் நிற்கிறதும் இல்லை. அவைகளைப் பிரபலியப்படுத்துகிற சங்கங்களையும் குருமாரையும் தூஷிக்கிறீர்கள். ஆனால் சவரியார், அந்தோனியர், வேதபோதகர், வீரமாமுனிவர் முதலானவர்களைப் பற்றி எழுதப்பட்டிருக்கிற சரித்திரங்களையும் கட்டுக் கதைகளையுமோவென்றால், நீங்கள் அதிகமாய் வாசித்துவருகிறீர்கள்.

"உலகம் எங்கும் போய்ச் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்" என்று சர்வேஸ்பரன் கட்டளையிருக்க, (மாற். 16:15) நீங்கள் பாப்புக் கட்டளையைப் பிரசங்கித்து வருகிறீர்கள். "வேத வாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்" என்று உத்தரவிருக்க. (யோவா. 5:39) நீங்கள் அவை

களைச் சபையார் ஆராய்ந்து பார்க்கக் கொடுக்கிறதில்லை. சுவிசேஷத்தைக்கொண்டு எல்லாரையும் இரட்சிப்புக்கு மனம் திருப்ப வேதஞ் சொல்ல, (ரோம. 1:16) நீங்கள் திருவிழா, சப்பரம், நாடகம் முதலானதைக் கொண்டு மனிதருடைய மனதை வேடிக்கைக்குத் திருப்பி வருகிறீர்கள். மனிதர் செய்யும் பாவ புண்ணியத்துக்கு நரகம் மோக்ஷம் என்கிற இரண்டு ஸ்தலங்கள்மாத்திரம் இருக்க, (மத். 25:34 46) நீங்கள் உத்தரிக்கிற ஸ்தலம் என்ற வேறொன்றையும் சேர்த்து மூன்று என்று போதிக்கிறீர்கள் பாவ மன்னிப்புக்குச் சர்வேஸ்பரனிடம் போக வேண்டியிருக்க, (யோவா; 14:6) நீங்கள் குருக்களிடம் போய்ச் சொல்லுகிறீர்கள். இரட்சிப்படைய இயேசுநாதருடைய புண்ணியம் பூரணமனதாய் இருக்க, (எபி. 10:14) நீங்கள் மனிதருடைய புண்ணியமும் வேண்டும் என்று போதிக்கிறீர்கள். பாவம் எல்லாம் தேவனுக்கு முன்பாக வெறுப்பாய் இருக்க, (நீதி. 15:9; 6:16-19) நீங்கள் பாவத்தை அற்ப பாவம் என்றும், சாவான பாவம் என்றும் பிரித்துப் போதிக்கிறீர்கள். தேவ திரவிய அநுமானங்கள் இரண்டு என்று மாத்திரம் சொல்லப்பட்டிருக்க, (மத். 22: 19, 20.) நீங்கள் ஏழு என்று சொல்லுகிறீர்கள். கிறிஸ்துவை விசுவாசிக்கும் ஜனங்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்க கட்டளையிட்டிருக்க; (மாற். 16: 15, 16) நீங்கள் கிறிஸ்துவை விசுவாசிக்கத் திராணியில்லாத கப்பலுக்கும் மணிக்கும், வீட்டுக்குங்கூட ஞானஸ்நானம் கொடுக்கிறீர்கள். சொரூபங்களைப் பண்ணவேண்டாம் என்று இரண்டாம் கற்பனை விலக்கியிருக்க நீங்கள் ஆணைப்போலும் பெண்ணைப் போலும் செய்து வணங்குகிறீர்கள். இருதயங்களை அறிகிற சர்வேஸ்பரனை மாத்திரம் நோக்கி ஜெபம் பண்ணச் சொல்லியிருக்க, (1 தீமோ. 2: 5, 6.) நீங்கள் சம்மனசுகளையும் அர்ச்சியசிஷ்டர்களையும் நோக்கி ஜெபம் பண்ணச் சொல்லுகிறீர்கள். இயேசுநாதர் உயிருள்ள பலியாக தம்மை சிலுவையில் ஒப்புக்கொடுத்திருக்க, (எபி. 9: 24, 28; 10: 10.) நீங்கள் உயிரற்ற பதார்த்தத்தை பூசையிலே பலியாக செலுத்தி வருகிறீர்கள். பாவத்தை இலவசமாக மன்னிக்க சர்வேஸ்பரன் சித்தமாயிருக்க, (ஏசா. 43: 25; 55: 7.) நீங்கள் பாவத்தைத் தரம் பிரித்துப் பணத்துக்கு விற்று வருகிறீர்கள்.

விவாகம் யாருக்குள்ளும் கனமுள்ளதாய் இருக்கிறது என்று சொல்லியிருக்க, (1 தீமோ. 3:2; எபி. 13:4) நீங்கள் குருமார் விரத்தராயிருக்க வருத்தம் பண்ணுகிறீர்கள். அந்நிய பாஷையில் தேவ ஆராதனே நடத்தப்படாது என்றிருக்க, (1 கொரி. 14:19-22) நீங்கள் இந்தியர்களுக்குத் தெரியாத லத்தீன் பாஷையிலே பூசை செய்து வருகிறீர்கள். ஒருவன் வியாதிப்பட்டால் எண்ணெய் பூசி ஜெபம்பண்ணி சுகமாக்கச் சொல்லியிருக்க, (யாக்.5:14,15) நீங்கள் சாக ஏதுவாயிருக்கிற மனுஷனுக்கு எண்ணெய் பூசி அவனுடைய பாவத்தை மன்னித்து விடுகிறீர்கள். சர்வேஸ்பரனே திருச்சபைக்குத் தலைவர் என்று வேதம் சொல்ல, (எபே. 1:22; 5:23) நீங்கள் பாப்புவை தலைவர் என்று பேதஞ் சொல்லுகிறீர்கள். என்ன ரோமான் மார்க்கத்தாரே, நீங்கள் செய்வதெல்லாம் ஏறுக்கு மாருய் இருக்கிறதே. ரோமான் மார்க்கத்தார் எடுத்த காரியங்கள் எல்லாம் சர்வேஸ்பரனுடைய சித்தத்திற்கும், அவர் அருளிய வேதத்துக்கும், அவருடைய சுத்த உபதேசங்களுக்கும் ஒத்தவைகள் என்று எண்ணும்படியாகச் சாத்தான் செய்து வைத்திருக்கிருனே ஒழிய வேறல்ல. அவன் ஆதியில் எப்படி ஆதாம் ஏவாளைப் பாம்பின் வடிவங்கொண்டு ஏய்த்து, அவர்களுடைய பரிசுத்த நிலையைக் குலேத்தானே, அப்படியே பிற்காலத்தில் அவன் பாப்புக்களின் மனதை மயக்கி, ரக்ஷகருடைய திருச்சபையை முற்றிலும் கெடுத்துப்போட்டான். ஒரு மரத்தின் தன்மையை அதின் கனியைக் கொண்டு அறிவதுபோல, ரோமான் மார்க்கம் கிறிஸ்து மார்க்கமாகுமா என்று வேதத்தைக் கொண்டு பரிசோதித்துப் பார்த்துத் தெளிவடையுங்கள். பிரியமானவர்களே, புரோட்டெஸ்டாண்டு கிறிஸ்தவர்களாகிய நாங்கள் வேதத்துக்கு விரோதமான காரியங்களே நடப்பித்தால், வேதத்தைக்கொண்டு எங்களுக்கு ரூபித்துக் காண்பியுங்கள்.

ரோமான் மார்க்கம் கிறிஸ்து மார்க்கத்தில் இருந்து விலகிப் போனதையும் அதின் அழிவையும் குறித்துச் சொல்லியது

கிறிஸ்துவை விசுவாசிக்கும் சபையில் இருந்து சிலர் விலகிப்போவார்கள் என்று வேதத்திலே சொல்லியிருப்பது, ரோமான் மார்க்கத்தாரைக் குறிக்கிறது என்று பின் வரும் அடையாளங்களினுல் காணப்படுகிறது. எப்படியென்ருல்:

அந்த விலகிப்போகும் மார்க்கம் கிறிஸ்துவின் சபையில் இருந்து உண்டாகும் என்று சொல்லியிருக்கிறது. (1 தீமோ. 4:1; 2 தெச. 2:3) அப்படியே ரோமான் மார்க்கம் கிறிஸ்துவின் சபையில் இருந்தே உண்டாயிற்று.

2. அது ரோமை ராஜ்யத்திலே உற்பத்தியாகும் என்று சொல்லியபடி. (தானி. 7: 7, 8.) இந்த ''நாலாம் மிருகம்'' ரோமை ராஜ்யத்தையே குறிக்கிறது. இதற்கு முன் பாபிலோன், பார்சிய, கிரேக்கை என்கிற மூன்று ராஜ்யங்கள் இருந்தன. அது ''பத்துக் கொம்புள்ளது'' என்றதுபோலவே, அது பிற்காலத்தில் பத்து ராஜ்யங்களாக வகுக்கப்பட்டது. அதில் ஒரு "சின்னக் கொம்பு" எழும்பும் என்று சொல்லிய பிரகாரம் ரோமான் மார்க்கம் ஆரம்பத்தில் சின்னதாயிருந்து, பிறகு சன்னம் சன்னமாய் வலுத்துக் கொண்டது. அதற்கு ''மனுஷ கண்ணும் பெருமையானவைகளைப் பேசும் வாயும் இருக்கும்'' என்று சொல்லப்பட்டது போலவே, பாப்பு மோக்ஷத்தில் திறவு கோலை உடையவர் என்றும், பாவத்தை மன்னிக்கக் கூடும் என்றும், வைதீக லௌகீக அதிகாரம் உடையவர் என்றும், சர்வேஸ்பரனுக்குப் பதிலாளி என்றும் சொல்லப்படுகிருர்.

3 அது கேட்டின் மகனுகிய பாவமனிதன் என்னப்படும் என்று சொல்லியிருக்கிறது. (2 தெச. 2: 3.) பாவ மனிதன் என்பது மகா கெட்டவர் என்று அர்த்தம். அப்படியே சில பாப்புகள் மகா கெட்டவர்களாய் இருந்தார்கள். விஜிலியுஸ் என்பவர் தமக்கு முன்னிருந்த பாப்பு

வைக் கொன்றவர். இரண்டாவது யோவான் பாப்பு, முறை கேடான பாவத்தைச் செய்தவர். பதின்மூன்று வது யோவான் பாப்பு, விபசாரத்தில் கண்டுபிடிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டவர். இன்னம் சொல்லவேண்டுமே யானுல், சில பாப்புகளால் நடப்பிக்கப்படாத அக்கிரமங் கள் பூமியிலே இல்லை என்றே சொல்ல வேண்டியது.

4. அது தேவனுக்கு விரோதமாய்த் தன்னை உயர்த் தும் என்று சொல்லியிருக்கிறது (2 தெச. 2: 4; தானி. 11:36.) அப்படியே பாப்புக்கள் சகல ராஜாக்கள் பேரிலும் அதிகாரத்தைச் செலுத்தினுர்கள். தங்கள் காலின் பெரும் விரலை ராஜாக்கள் முத்தம் இடவும், தங்கள் ஏறு குதிரையின் அங்கவடியைத் தாங்கவும் செய்தார்கள். ஏழாவது கிரகோரி பாப்பு, நாலாவது என்ரிராஜனை தமது அரண்மனைக்கு முன் வெற்றுக் காலோடே நிற்கச் செய் தார். மூன்ரும் அலெக்சந்தர் பாப்பு, முதலாம் அலெக் சந்தர் ராஜனை பிடரியிலே மிதித்தார். சிலேஸ்தினுஸ் பாப்பு, ஆருவது என்ரிராஜனின் கிரீடத்தை உதைத்தார் தேவனுக்கு மாத்திரம் உள்ள தவருமை பாப்புக்களுக்கும் உண்டு என்று உயர்த்துகிருர்கள்.

5. அது தேவனுக்குச் செலுத்தும் ஆராதனை தனக்கு உரியதென்று சொல்லும் என்று சொல்லியிருக்கிறது. (2 தெச. 2: 4.) அப்படியே பாப்புக்கள் அர்ச்சியசிஷ்டர்கள் என்றும், ஆண்டவர் என்றும், பூலோக நாதர் என்றும், பிரதிதேவர் என்றும் சொல்லப்படுவதும் அல்லாமல், சர் வேஸ்பரனுடைய ஆளுகையும் பாப்புக்களின் ஆளுகையும் பேதம் இல்லாமல் ஒன்ருய் இருக்கிறது என்று சாதிக் கிருர்கள்.

6. அது வஞ்சிக்கிற ஆவிகளுக்கும், பிசாசுகளின் உப தேசங்களுக்கும் இடங்கொடுக்கும் என்று சொல்லி இருக் கிறது. (1 தீமோ. 4: 1; தானி. 11: 38, 39.) ஆரம்பத்தில் சத்திய வேதத்தில் உள்ளபடி ஆராதனை செய்து கொண் டிருந்த ரோமாபுரி சபையைக் கெடுத்து சர்வேஸ்பரனுக்குப் பதிலாகப் பாப்புவையும், சுவிசேஷத்துக்குப் பதிலாகப் பாரம்பரைகளையும் ஏற்றுக் கொள்ளும்படியாக செய்த

கள்ளப் போதகர்களை இந்த வசனம் குறிக்கிறது. அஞ்ஞானிகள் செத்துப்போன மனுஷர்களின் ஆவிகள் பேரில் நம்பிக்கை வைத்து, அவைகளுடைய உதவியைத் தேடிக்கொள்வது போல, ரோமானித்தாரும் செத்துப் போன மனிதர்களின் ஆவிகளின் உதவியைக் கல்லறை ஸ்தானங்களில் நின்று வேண்டிக்கொள்ளுவதைக் கைக்கு மெய்யாய்க் கண்டு கொள்ளவும்.

7. அது வஞ்சிக்கிற பொய்களைப் பேசும் என்று சொல்லியிருக்கிறது. 1 தீமோ 4: 1.) அப்படியே வேதத்தில் இல்லாத உத்தரிக்கும் ஸ்தலம், பூசை, அர்ச்சியசிஷ்டர்களின் வணக்கம், ஏழு திரவிய அநுமானங்கள், மனுஷ புண்ணியங்கள், குருமார் விரத்தம் முதலிய உபதேசங்கள் உண்டென்றும் அநேக நூறு வருஷங்களுக்கு முன் இறந்து போன அர்ச்சியசிஷ்டர்களின் எலும்பு, தோல், மயிர், வஸ்திரம் முதலானவற்றைக் கண்டெடுத்தோம் என்றும், நாசரேத்திலே யோசேப்பும் மரியாளும் குடியிருந்த வீடு, காபிரியேல் சம்மனசினுல் இத்தாலியா தேசத்துக்குக் கொண்டு போகப்பட்டது என்றும், கோட்டாற்றிலே சவரியாருக்கு மயிர் வளர்ந்து வருஷந்தோறும் சிறைக்கப்பட்டு வருகிறதென்றும் சொல்லுகிற பொய்யரும் வஞ்சகரும் யார் என்று நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள்.

8. அது சூடுண்ட மனச் சாட்சியுள்ளது என்று சொல்லியிருக்கிறது. (1 தீமோ. 4: 2.) மனக் கடினமுள்ளவர்களும், குற்றமற்றவர்களை இரக்கமின்றி காவல்படுத்தி, அடித்து, இன்குவிஷன் என்னும் சங்கத்தைக் கொண்டு கொலை செய்தவர்களும், மகமதுவைப் போல மார்க்க விஷயத்துக்காக எந்தப் பொல்லாங்கையும் துணிகரமாயும் தந்திரமாயும் செய்கிறவர்களும், மண்ணுசை பெண்ணுசை பொன்னுசை என்பவற்றை வெறுத்து விட்டவர்கள் என்று வேஷம் போட்டுக் கொண்டிருக்கிறவர்களும் இன்னர் என்றும் நீங்களே அறிந்து கொள்ளுங்கள்.

9. அது விவாகம் பண்ணக் கூடாதென்று விலக்கும் என்று சொல்லியிருக்கிறது. (1 தீமோ. 4: 3.) அப்படியே

முதலாவது கிறிஸ்தவனாயிருந்த கொனஸ்தந்தீன், விரத்துவ நிலைமையைப்புகழ்ந்து. விவாக நிலைமையை இகழ்ந்து பேசினான். அதுமுதல் இந்தக் கொள்கை நலம் என்று திரென்று சங்கத்தால் 1515-ம் வருஷத்தில் உறுதியாக்கப் பட்டது. குருமார் விவாகம் பண்ணப்படாதென்று சொல்லுவது ரோமான் சபையே அல்லாது வேறெந்த சபையும் அல்ல என்பது எல்லாருக்கும் தெரிந்த காரியம்.

10. அது போஜன பதார்த்தங்களை விலக்கும்படி கற்பிக்கும் என்று சொல்லியிருக்கிறது. *(1 தீமோ. 4; 3.)* அப்படியே தபசு நாட்களிலும், பின்னும் சில விசேஷ தினங்களிலும் மாம்சம் சாப்பிடப்படாது என்றும், ஒரு சந்தி இருக்க வேண்டும் என்றும் கண்டிப்புச் செய்வது ரோமான் மார்க்கமே தவிர வேறல்ல.

11. அது அப்போஸ்தலருடைய நாட்களிலே ஆரம்பித்தது என்று சொல்லப்பட்டது. *(2 தெச. 2:7.)* அப்படியே அக்காலத்தில் சிலர் விசுவாசத்தை விட்டு விலகி, சம்மனசு ஆராதனையின் பேரில் விருப்பம் ஆனார்கள். *(கொலோ. 2: 18)* அநேகர் வேத வசனத்தைக் கலப்பாய்ப் பேசி புரட்டினார்கள். *(2 கொரி. 10: 4, 5)* அவலட்சணமாக ஆதாயம்பெற தகாதவைகளை உபதேசித்தார்கள். *(1தீமோ. 6: 5: தீத். 1: 11)* நாட்களையும் மாதங்களையும் அநுசரித்தார்கள். *(கலா. 4: 10.)* போஜனங்களில் சிலதை விலக்கினார்கள். *(1 கொரி. 8: 8; கொலோ. 2: 21.)* இந்தக் கேடுகள் அப்போஸ்தலர் காலத்திலேயே உற்பத்தியாகி, பிறகு சன்னம் சன்னமாய் ரோமாபுரி சபையிலும் நுழைந்து இப்போது பலத்துக் கொண்டது.

12. அந்தக் கேடுள்ள மனிதன் தோன்றாதபடிக்கு ஒரு தடை இருந்தது. அந்தத் தடை பிற்காலத்தில் நீக்கப்பட்டது என்று சொல்லியிருக்கிறது. (2 தெச 2:7) அது எப்படி நீக்கப்பட்டது என்றால், நாலாம் நூற்றாண்டில் ரோமை ராயனுடைய ஆளுகை பலவீனப்படவே, ரோமாபுரியில் கிறிஸ்து சபை மும்முரப்பட்டது. மேற்றிராணிமார் அதிகாரத்தைச் செலுத்தினார்கள். ரோமாபுரியில்

ராஜன் இல்லாமலும் இருந்தது. பாப்பு உண்டாகி ராஜாங் கத்தையும் சபை ஆளுகையையும் பார்வையிட்டு வந்தார். உயர்ந்தவன் கைப்பணிகாரம் என்றது போல, சகலரும் அவருக்குக் கீழ்ப்பட்டார்கள்.

13 அதின் நாம அட்சரங்களின் இலக்கம் 666 என்று சொல்லியிருக்கிறது. (வெளி. 13: 18) ரோமான் சபை, லத்தீன் சபை என்று சொல்லப்படுகிறது. லத்தினுஸ் (Lateinos) என்னும் கிரேக்கை வார்த்தைக்கு லத்தீன் என்கிற மனுஷன் என்று அர்த்தம். அந்தப் பெயரில் அடங்கிய அட்சரங்களை, இலக்க முறையாய் எண்ணிப் பார்க்கும்போது, சரியாய் 666 என்னும் தொகை வருகிற தாக சாஸ்திரிகள் சொல்லியிருக்கிறார்கள். இந்த இரண்டு சொல்லுக்கும் இருக்கிற இசைவு மகா ஆச்சரியமாய் இருக்கிறது.

மேலே சொல்லப்பட்ட உபதேசங்களையும், இந்தப் பதிமூன்று குறிப்புகளையும், தேவ கிருபையைக் கொண்டு கூர்ந்து கவனிப்பவர்கள் உண்டானால், அவர்கள் ரோமான் மார்க்கம் தப்பு மார்க்கம் என்று அறிந்து, என்ன தடை இருந்த போதிலும் அதை விட்டு விலகி, சத்திய மார்க்கத்தைத் தழுவிக் கொள்ளுவார்கள் என்ப தற்குச் சந்தேகம் இல்லை. இந்தத் தப்பான மார்க்கம் ஒரு காலத்தில் அழிந்துபோகும் என்பதற்கு யாதொரு சந்தே கம் இல்லை. இது மெய்யாய் அழிந்துபோகும் என்பதற்கு 2 தெச. 1: 8-ம் வசனத்தையும், வெளிப்படுத்தின விசே ஷம் 17, 18-ம் அதிகாரங்களையும் பார்வையிடவும். ஆனால் அது எப்போது அழிக்கப்படும் என்று ஒருவருக்கும் தெரி யாது: சர்வேஸ்பரனுக்கு மாத்திரம் தெரியும். தானியேல் தீர்க்கதரிசனம் 7-ம் அதிகாரத்திலும், வெளிப்படுத்தின விசேஷம் 12, 13-ம் அதிகாரங்களிலும் சொல்லப்பட்டு இருக்கிற சங்கதிகளின் காலக் குறிப்புகளைக்கொண்டு பாப் புக்களின் லௌகீக வைதீக அதிகாரங்கள் 1260 வருஷ காலம் மாத்திரம் இருக்கும் என்று லண்டன் பட்டணத்து கின்னஸ் என்பவர் (Guinness of London) உத்தேசித்து இருக்கிறார். அப்படியே கி. பி. 755-ம் வருஷ முதல் 1115

வருஷ காலமாகப் பாப்புக்களின் நிலைகொண்டிருந்த லௌகீக அதிகாரம் சென்ற 1870-ம் வருஷத்தோடே எடுபட்டுப்போயிற்று. மற்ற அதிகாரமும் தீர்க்கதரிசனகாலம் நிறைவேறினவுடனே எடுபட்டுப் போகும் என்பதற்குச் சந்தேகமே இல்லை. காரியம் இப்படி இருப்பதால் பிரியமான ரோமான் மார்க்கத்தாரே, நீங்கள் வம்புத்தனத்தினாலாவது மனக்கடினத்தினாலாவது இருந்த நிலையிலே இருக்க வேண்டாம்.

எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதைப் பிடித்துக் கொள்ளுங்கள். ''பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டு விலகுங்கள்'' (1 தெச. 5: 21, 22) வேதம் சொல்லுவதைக் கைக்கொள்ளுங்கள்.

''அப்படிச் செய்தால் பிரதான மேய்ப்பர் வெளிப்படும்போது மகிமையுள்ள வாடாத கிரீடத்தைப் பெறுவீர்கள்'' (1 பேது. 5: 4.)

டாஸ் பிரஸ், நாசரேத்; 2-3-1964.

ஆவிக்குரிய சில புத்தகங்கள்

		ரூ.	ந.பை
1.	பொன் தூள்	0	25
2.	இயேசு கிறிஸ்துவும் பரிபூரண இரட்சிப்பும்	0	12
3.	சாரூப மகிமை விலாசம் (இது இரட்சகரைப் போல் ஜீவிக்க வழி காட்டும் அருமையான நூல்)	0	12
4.	பிரதான வரமாகிய அன்பு	0	20
5.	இரட்சிப்பு, அதின் நிச்சயம், அதின் சந்தோஷம்	0	20
6.	கிறிஸ்தவ ஜீவியம்	0	35
7.	சிறந்த தேவ ஊழியன்	0	50
8.	பரிந்து பேசும் ஜெப ஒழுக்க நூல்	0	40
9.	சிலுவை சுமந்தோன்	0	40
10.	பரம குரு (சிறிய எழுத்தில்)	0	25
11.	பரம குரு (பெரிய எழுத்தில்)	0	37
12.	நகை அணிவது சரியா?	0	06
13.	சுவிசேஷ பிரசங்கங்கள்	3	00
14.	சந்திரலீலாள்	0	90
15.	கிறிஸ்தவக் கம்பன் கிருஷ்ணபிள்ளை	1	00
16.	சாது சுந்தர்சிங் பிரசங்கங்கள்	1	50
17.	மெய்ஞ்ஞான விளக்கம் (By சாதுசுந்தர்சிங்)	0	75
18.	ஆவிக்குரிய ஜீவிய விளக்கம் (By சாது சுந்தர்சிங்)	0	65
19.	கைலாச மகாரிஷி (தமிழ்)	0	75
20.	கைலாச மகாரிஷி (இங்கிலீஷ்)	1	25
21.	ரோமான் மார்க்க சீர்தூக்கல்	0	75

கிடைக்குமிடம்:-

S. தாமஸ் இரத்தினம்,
ரெயில்வே ஸ்டேஷன் பக்கம்,
கீழ ஆம்பூர் P. O.,
திருநெல்வேலி Dt.